விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 17.04.2021 சனிக்கிழமை | இதழ் : 137 | பக்கங்கள் : 16




# அரசியலுக்கு ஒருபோதுமே வரமாட்டேன்!

## வேலன் சுவாமிகள் திட்டவட்டம்



யாழ்ப்பாணம், ஏப்ரல் 17

**நான் ஒருபோதும் கட்சி அரசியலுக்கோ, தேர்தல் அரசியலுக்கோ வரவே மாட்டேன் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் வேலன் சுவாமிகள்.**

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் கொள்கைக்கு அமைய அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் ஒருபோதும் அரசியலுக்கு வர மாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

15

# துறைமுகநகர் சட்டமூலத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு தேவை

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, ஏப். 17

அரசாங்கத்தின் உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை நிறைவேற்று வதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களுடைய ஆணையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று

15

# பொலிஸார் இருவர் உட்பட யாழில் 7 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஏப். 17

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் இருவர் உட்பட மாவட்டத்தில் மேலும் 7 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வு கூடத்திலும்

15

# பால் புரைக்கேறி குழந்தை மரணம்

கிளிநொச்சி,ஏப்.17

கிளிநொச்சி, முழங்காவிலில் நான்கு மாத ஆண் குழந்தை பால் புரைக்கேறி உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

பால் புரைக்கேறியதால் குழந்தை சிரமப்பட்டதை அடுத்து முழங்காவில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும் குழந்தை உயிரிழந்து விட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இதுகுறித்து முழங்காவில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ரஞ்சனை சிறையில் சந்தித்தார் நாமல்!

கொழும்பு, ஏப். 17

தற்போது சிறையில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று பார்வையிட்டார்.

சிறை வட்டாரங்களின்படி, அங்குனுகொலபெலெச சிறைக்கு நேற்று சென்ற நாமல், சிறையில் ரஞ்சனை பார்வையிட்டார்.

# அரசை வீழ்த்தும் நிலையில் பங்காளிக்கட்சிகள் இல்லை

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, ஏப்.17

இந்த அரசாங்கத்தை வீழ்த்துகின்ற நிலையில் பங்காளிக் கட்சிகள் ஒருபோதும் இருக்காது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பி

15

# துறைமுகநகர் பற்றிய கேள்விக்கு பதிலளிக்காது நழுவினார் வீரசேகர



கொழும்பு, ஏப். 17

கொழும்பு துறைமுக நகர் பற்றி கருத்து வெளியிட விரும்பவில்லை என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் நேற்று அமைச்சர் சரத் வீரசேகர விடம் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோது

15

# கொரோனா தொற்றால் மேலும் ஏழு பேர் மரணம்

கொழும்பு, ஏப்.17

நாட்டில் மேலும் ஏழு பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 615ஆக உயர்வடைந்தது. (எ)

# அரச விவகாரங்கள் குறித்து பேசுவதற்கே விஜயதாஸவை அழைத்தாராம் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 17

நாட்டின் ஜனாதிபதியொருவர், அரசாங்க விவகாரத்தில் ஏதேனும் கவலைகள் இருந்தால் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொள்வது ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை என அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னை தொலைபேசியில் அச்

15

# முல்லைத்தீவில் கனமழை!

முல்லைத்தீவு, ஏப். 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இடி மின்னலுடன் கனமழை பொழிந்துள்ளது.

குறிப்பாக, 18 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு மின்னல் தாக்கமும் இருக்கும் என எச்சரிக்கை

15



06
எஸ்.ரி.எவ். துப்பாக்கிச் சூட்டில் அதிகாலை இருவர் படுகாயம்!



07
கொழும்பு அரசியலில் பரபரப்பு தொடர்கிறது!



12
பொது இடங்களில் இனிமேல் முகக்கவசம் தேவையில்லை!



13
யாழ். வலய பாடசாலைகள் திங்கள் முதல் மீள ஆரம்பம்!

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச விவகாரங்கள்...

சுறுத்தினார் என ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ பகிரங்கமாக குற்றம்சாட்டியதை தொடர்ந்து, அதற்கு விளக்கமளிக்கும் விதமாக மஹிந்தானந்த அளுத்கமகே இதனைக் கூறினார்.

உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு தொடர்பில், பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று முன் தினம் செய்தியாளர் சந்திப்பில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்தார்.

இதை தொடர்ந்து நேற்று காலையில் ஜனாதிபதி கோட்டாபய தன்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அச்சுறுத்தியதாக பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதை தொடர்ந்து நேற்று மாலை செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே-

முன்னாள் ஜனாதிபதிகள் சந்திரிகா பண்டாரநாயக்க மற்றும் மஹிந்த ஆகியோருடன் இணைந்து பணியாற்றியதாகவும், அரசாங்கத்திற்குள் சில சிக்கல்கள் எழும்போது அவர்கள் அதே செயல்முறையைப் பின்பற்றியதாகவும் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதற்காக ஜனாதிபதி, தொலைபேசியில் விஜயதாஸ ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு பேசினார்.

ஜனாதிபதிக்கும் ஓர் அரசாங்க எம்.பி.க்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வெளியாகின்றன.

அரசாங்கத்தின் திட்டத்தை நாசப்படுத்தும் நோக்கங்களைக் கொண்ட பிற தரப்புக்கள் இதன் பின்னணியில் இருப்பதாக நம்புவதாக அவர் தெரிவித்தார்.

எந்தவோர் அரசமைப்பு விதிகளையும் மீறி உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு வரைவு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாது என்றும் அவர் கூறினார்.

இந்த செயல்முறையை முன்னெடுப்பதற்கு முன் அவர்கள் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்காக காத்திருப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர திட்டம் தொடர்பாக தோரமற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகவும், கொழும்பு துறைமுக நகரம் இலங்கைக்கு ஒரு திருப்புமுனையாகும், இது நாட்டை சிங்கப்பூருக்கு இணையான நிலைக்கு உயர்த்தும் என்று அமைச்சர் கூறினார்.

## அரசை வீழ்த்தும்...

னர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவுக்கு நேற்று வெள்ளிக்கிழமை விஜயம் மேற்கொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

அரசாங்கத்துக்குள் சில குழப்பங்கள் ஏற்பட்டிருந்தாலும் உடனடியாக அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படும் என்று நான் நம்பவில்லை.

அதில், ஒரு பலவீனமான நிலையை ஏற்படுத்தலாமே தவிர, அரசாங்கத்தை வீழ்த்துகின்ற நிலையில் பங்காளிக் கட்சிகள் இருக்காது.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் தொகுதிக்கு மூன்று பேரை நியமிப்பது என்ற பொதுஜன பெரமுனவின் யோசனை நாட்டின் எந்தப் பகுதிக்கும் சாத்தியமில்லாத மற்றும் குழப்புகின்ற ஒன்றாகும்.

ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொருவரை நிறுத்திவிட்டு அவற்றைத் தாம் வென்றெடுக்கலாம் என்று பசில் ராஜபக்ஷ எண்ணியிருக்கலாம். அதற்காக இப்படியொரு திட்டத்தை வைத்திருக்கலாம். இது ஜனநாயகத்தையும், அரசியல் கட்சிகளையும் கேலிக்கிடமாக்கும் விடயமாகவே நான் பார்க்கின்றேன்- என்றார். (எ)

## துறைமுகநகர் சட்ட...

நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார திசாநாயக்க, ”நாட்டின் இறைமையைக் கேள்விக்குட்படுத்தக் கூடிய பல அம்சங்கள் உத்தேச சட்ட மூலத்தில் காணப்படுகின்றது” எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

“முதலீட்டுச் சபை சுயாதீனமான ஒரு அமைப்பாகும். இவ்வாறான முதலீட்டுத் திட்டங்களையிட்டு அந்த சபை மேற்பார்வையிட்டிருக்க வேண்டும். எனவே, அரசாங்கம் எதற்காக முதலீட்டுச் சபை மூலமாக இதனை முன்னெடுத்திருக்கலாம். அல்லது துறைமுக நகரின் செயற்பாடுகள் மற்றும் வரிச் சலுகைகள் குறித்து தனியான ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்க முடியும்.

எதற்காக இது உள்ளூர் அதிகார சபைக்குட்பட்டதாக இல்லை? எதற்காக சம்பளங்கள் வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்படவுள்ளது? எதற்காக முதலீட்டாளர்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டிருக்கின்றது? அதனால், நீண்டகாலத் திட்டம் ஒன்றின் அடிப்படையில் இலங்கையின் வர்த்தகத்தில் சீனா தலையிட முற்படுகின்றது. துறைமுக ஆணைக்குழுவின் சட்டமூலம் மக்களுடைய கருத்துக் கணிப்பு இன்றி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட முடியாது” எனவும் தெரிவித்தார்.

## அரசியலுக்கு...

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வேலன் சுவாமிகளை முதலமைச்சர் வேட்பாளராக களமிறக்கலாம் என்ற கருத்து முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பிலேயே வேலன் சுவாமிகள் இந்த மறுப்பை வெளியிட்டுள்ளார்.

“பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரழுச்சி இயக்கத்தின் கொள்ளைகளில் ஒன்றான உறுப்பினர்கள் எவரும் கட்சி அரசியலிலோ தேர்தல் அரசியலிலோ ஈடுபடுவதில்லை என்பது என்னையும் சாரும்.

நாம் அரசியல் மற்றும் சமூக மட்டங்களை இணைத்து உரிமைகளுக்கான போராட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலேயே எமது பணியை முன்னெடுப்போம்” என்றும் வேலன் சுவாமிகள் கூறினார். (அ)

## பொலிஸார் இருவர்...

588 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 7 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர். மற்றைய இருவரும் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவர்கள்.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள்.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.” என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

# எம்மை யாரும் அச்சுறுத்தி மௌனமாக்க முடியாது

## முருத்தெட்டுவ அனந்த தேரர்

கொழும்பு, ஏப். 17

“மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக எவராவது அதிகார துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டால் மகாசங்கத்தினர் அதற்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள். அச்சுறுத்தலால் பௌத்த பிக்குகளை யாரும் மௌனமாக்கிவிட முடியாது” என நாராஹன்பிட்டி அபயராம விஹா ரையின் தலைமை விஹாராதிபதி முருத்துதெட்டுவ அனந்த தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எவர் எதிர்த்தாலும் மாகாணசபைகள் தேர்தல்கள் இடம்பெறும் என தகவல்கள் வெளியாகியுள்ளன என குறிப்பிட்டுள்ள அவர் ஆனால் மாகாணசபைகளிற்கு எதிரான குரல்கள் ஓயாது எனவும் தெரிவித்துள்ளார்.

“பௌத்த பிக்குகள் எப்போதுமே நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைத்தவர்கள். அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்த முற்படுபவர்களுக்கு எதிராக நிற்க அவர்கள் தயங்கப்போவதில்லை. பௌத்த பிக்குகளை யாரும் மௌனமாக்கிவிட முடியாது. நாட்டின் சட்டங்களை மாற்றவோ அல்லது நாட்டுக்குப் பாதகமான சட்டங்களை இயற்றவோ யாராவது முற்பட்டால், அதனை நாம் கடுமையாக எதிர்ப்போம்” எனவும் அவர் தெரிவித்தார்.

# சட்டமூலம் தொடர்பில் உண்மையான விபரங்கள் விஜயதாஸவுக்கு தெரியாது

## இராஜாங்க அமைச்சர் அஜித் கப்ரால்

கொழும்பு, ஏப். 17

பொதுஜன பெரமுனை எம்.பி. விஜயதாச ராஜபக்சவுக்கும் ஏனையவர்களுக்கும் உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்த உண்மையான விபரங்கள் தெரியாது என இராஜாங்க அமைச்சர் அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ உத்தேச சட்டமூலத்தை விமர்சித்து கருத்து வெளியிட்டுள்ளமை குறித்து ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதில் அளிக்கையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷ என்னிடம் இது குறித்து கேள்வி எழுப்பியிருந்தால் நான் அவருக்கு தெளிவுபடுத்தியிருப்பேன் என நான் உண்மை நிலையை தெளிவுபடுத்தினால் அவர் அதனை விளங்கிக் கொள்வார் என கருதுகின்றேன் எனவும் அஜித் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உண்மையான நிலைமையை தெளிவுபடுத்தியுள்ளாரா என்ற கேள்விக்கு ஜனாதிபதி உண்மை நிலவரத்தை தெளிவுபடுத்தியிருப்பார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

செய்தியாளர் மாநாட்டை நடத்தி ஊடகங்களிற்கு விடயங்களை ராஜபக்ஷ தெரிவித்திருப்பது தவறு என குறிப்பிட்டுள்ள அஜித்கப்ரால் அனைத்து அரச பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கூட்டுபொறுப்புள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கை மீனவர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்யுங்கள்

## உறவினர்கள் கோரிக்கை

கொழும்பு, ஏப். 17

இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்கள் இருவரையும் உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த மீனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஊடாக வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்ததாகத் தெரிவித்து கடந்த மார்ச் 10ஆம் திகதி மன்னார் பேசாலையைச் சேர்ந்த இரு மீனவர்கள் இந்திய கடலோரக் காவல் படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட, ரவீந்திரன் அருண் குரூஸ் மற்றும் வெலிசோர் றேகன் பாய்வா ஆகிய இருவரும் தமிழகத்தில் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு சென்னை புழல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த மீனவர்கள் இருவரும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்தியக் கடல் எல்லைக்குள் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை உடனடியாக விடுவிக்கவேண்டும் என உறவினர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, இது தொடர்பாக மீனவர்களின் உறவினர்களால் பேசாலை பொலிஸ் நிலையம் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## துறைமுகநகர் பற்றி...

அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகர் தனியான ஆட்சிக்கு உட்படும் என வெளியான தகவல்கள் குறித்து அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த கேள்விகளுக்கு தாம் பதிலளிக்கப் போவதில்லை என அமைச்சர் கூறினார்.

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எந்தவொரு தீர்மானத்தையும் சிந்தித்து எடுக்கக் கூடியவர் எனவும் அவரது தீர்மானத்தை அமுல்படுத்த தாம் ஒத்துழைப்பு வழங்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

துறைமுக நகர் பொருளாதார ஆணைக்குழு பற்றிய சட்ட மூலம் இன்னமும் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி எடுக்கும் தீர்மானம் குறித்து அவரிடமே கேட்க வேண்டும் எனவும் அவரது தீர்மானத்துக்கு ஆதரவளிக்கப்படும் எனவும் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

## முல்லைத்தீவில்...

விடுக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு பகுதியில் மின்னல் தாக்கி மூவர் உயிரிழந்திருந்தனர். அத்தோடு நேற்றும் குறித்த பகுதியை அண்டிய பகுதிகளில் இடி மின்னலுடன் கனமழை பொழிந்துள்ளது.

இதேவேளை, மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இடி மின்னலுடன் கனமழை பொழிந்துள்ளது. இதனால் நேற்றும் புதுக்குடியிருப்பு, வேணாவில் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

மன்னன் ஒருவன் வேட்டையாடப் போவதற்கு முன் தனது அமைச்சரை அழைத்து "இண்டைக்கு மழை வருமா?" எனக் கேட்டான்.

'வராது' என்றான் அமைச்சன்.

வழியிலே ஒரு கழுதை மேல் வந்து கொண்டிருந்த குடியானவன் ஒருவன் கொஞ்ச நேரத்தில் மழை வரும் என மன்னனை எச்சரித்தான்.

அதைப் பொருட்படுத்தாமல்போன மன்னன் வேட்டையாடிக் கொண்டிருந்த போது கடும் மழை வந்து நன்றாய் நனைந்துபோனான். திரும்பும் வழியில் குடியானவனைச் சந்தித்து ,'மழை வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?' எனக் கேட்டான்.

அவனோ, 'மன்னா எனக்குத் தெரியாது. ஆனால், என் கழுதைக்குத் தெரியும். அது மழை வரும்முன் காதுகளை முன்னுக்கு நீட்டிக் கொள்ளும்.' என்றான்.

உடனே மன்னன் அமைச்சரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு கழுதையை அமைச்சராக்கினான்.

இக்கதையை ஆபிரஹாம் லிங்கன் கூறி விட்டு சொன்னார், 'அதில்தான் மன்னன் ஒரு மிகப்பெரிய தவறு செய்துவிட்டான். என்னவெனில், அது முதற்கொண்டு எல்லாக் கழுதைகளுக்கும் ஏதாவது பதவி கொடுக்க வேண்டும் என்று அந்த அமைச்சர் கழுதை விடாப்பிடியாக நின்றதாம்.

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும், பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் அவர்களுக்கும் அப்படி என்ன பிரச்னை என்பது இன்றுவரை எவருக்கும் தெரியாது.

ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சர் விக்னேஸ்வரனாக்கியது சுமந்திரன் என்பது ஒன்றும் இரகசியமானது அல்ல. சம்பந்தன் ஐயாவின் ஆசீர்வாதமும் இருந்தாலும், அதில் சுமந்திரனின் பங்கு குறிப்பிடுதற்குரியது. ஆனால், அதே சுமந்திரன் அவரை பதவியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்கு காட்டிய அக்கறையும் ஒன்றும் இரகசியமானது அல்ல.

அப்படி என்னதான் இடையிலே, இருவருக்குமிடையே நடந்தது என்பது இன்றுவரை அவர்கள் இருவரையும் தவிர வேறு எவருக்கும் தெரிந்ததாகத் தெரியவில்லை.

அப்போது எம்.பி.யாக இருந்த மாவை சேனாதிராசாவை களமிறக்க கூட்டமைப்பின் பெரும்பான்மையானவர்கள் விடாப்பிடியாக நிற்க, சுமந்திரனும் சம்பந்தனும் விடாப்பிடியாக நின்று விக்னேஸ்வரனை அரசியல் மேடைக்கு அழைத்து வந்தார்கள். இப்போது, மாவை பாராளுமன்றத்திலும் இல்லை. நடக்கவிருக்கும் மாகாண சபைத் தேர்தலில் மாவை களமிறங்குவது என்பது தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ஒன்றாகிவிட்டது. இப்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாம் செய்ய வேண்டியது, தமிழ்த் தேசிய வாக்குகள் சிதறிவிடாமல் திரட்சியாகப் பெற்று தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதி ஒருவர் முதல்வராகவும், தமிழ் தேசியக் கட்சிகளிடம் மாகாண சபை நிர்வாகம் இருக்கவும் வழிசமைக்க வேண்டும்.

அதைவிடுத்து தங்களுக்குள் இருக்கும் ஈகோவில் ஒருவரையொருவர் தூற்றுவதும், அல்லது தத்தமது வேண்டியவர்களுக்காக துதி பாடுவதும் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை. மாறாக தமிழ்த் தேசியத்திற்கு மாறான வாக்குகள் திரட்சியாக ஓர் அணிக்கு செல்லுமானால், மாகாண சபை அதிகாரத்தையே தமிழ்த் தேசிய அரசியல் இழக்க நேரிடும்.

யார் சொன்னாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிக இடங்களை கைப்பற்றும் என்பது தெரிந்ததே. ஆகவே, தமது முதல்வர் வேட்பாளர் யார் என்பதை கூட்டமைப்பே முடிவு செய்யவேண்டும். அந்த விடயத்தில் மற்றக் கட்சிகள் மூக்கை நுழைப்பது சரியான முன் உதாரணம் ஆகாது.

அவர்கள் தங்கள் வேட்பாளர் யார் என்பதை முடிவு செய்த பின்னர், மற்றைய தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் இணைந்து ஒருமித்து நின்றால் மாத்திரமே மாகாண சபையை காப்பாற்றமுடியும்.

மாறாக தத்தமக்குள்ளே இருக்கும், கயிறுழுப்பு போட்டியை மாகாண சபைத் தேர்தலிலும் காட்டினால், சில வேளைகளில் கூட்டமைப்பின் இன்னும் சில வாக்குகளை விக்னேஸ்வரன் அணியும் கஜேந்திஜரகுமார் அணியும் பங்கு போட்டுக் கொள்ளலாமே தவிர, மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவப்போவதில்லை.

மாறாக தமிழ்த் தேசியத்திற்கு எதிரான வாக்குகள் அனைத்தும் ஓரணியில் திரண்டால் ஆட்சியை தமிழ்த் தேசிய கட்சிகள் பிடிப்பது என்பது பலத்த சவாலுக்குரியதாகி விடும்.

மாகாண சபை தேர்தலில் வேலன் சுவாமியை பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்ற விக்னேஸ்வரன் ஐயாவின் சுயவிருப்பத்தை பார்த்தபோது, நல்ல காலம் பிரேமானந்தாஜி இப்போது உயிருடன் இல்லை என்று நிம்மதிப் பெருமூச்சையே விட முடிந்தது.

**- ஊர்க்குருவி.**

# சவூதியில் தடுத்து வைத்துள்ள பெண்களை இலங்கை அழைத்துவர வலியுறுத்துங்கள்!

## மக்களை கோருகிறது சர்வதேச மன்னிப்பு சபை

புதுடில்லி, ஏப். 17

**சவூதி அரேபியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையைச் சேர்ந்த 41 பெண் புலம்பெயர் தொழிலாளர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்துவருவதற்கு இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.**

அதுமாத்திரமன்றி அவர்களின் விடுதலையை வலியுறுத்தி, நாட்டு மக்கள் அனைவரும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்னவிற்கு கடிதமொன்றை எழுதுமாறும் மன்னிப்புச்சபை கோரியுள்ளது. அத்துடன், அதற்கான மாதிரி கடிதத்தையும் மன்னிப்புச்சபை அதன் இணையப்பக்கத்தில் வெளியிட்டுள்ளது.

அக்கடிதத்தில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன,

இலங்கையைச் சேர்ந்த 41 பெண் புலம்பெயர் தொழிலாளர்கள் சுமார் 18 மாதகாலமாக சவுதி அரேபியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 3 பெண்கள் தமது பிள்ளைகளையும் தம்முடன் வைத்திருக்கின்றனர். மற்றுமொரு பெண்ணுக்கு அவசர மருத்துவ உதவிக்கான தேவையேற்பட்டுள்ளது.

அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண்களுக்கு எதிராக ஏதேனும் முறைப்பாடுகள் அல்லது வழக்குகள் காணப்படுகின்றனவா என்பது குறித்து இதுவரை அறிவிக்கப்படவில்லை.

அதுமாத்திரமன்றி அவர்கள் தடுத்துவைக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தைப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அவர்களுக்கு சட்டரீதியான உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

அவர்களை விரைவில் விடுவிப்பதாக சிறைச்சாலை அதிகாரிகள் வாக்குறுதியளித்திருந்த போதிலும், தற்போது வரை 41 பெண்களும் விடுவிக்கப்படவில்லை. இந்நிலையில் அவர்களை உடனடியாக மீண்டும் நாட்டிற்கு அழைத்துவருவதற்கு இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசியமாகும் அவர்களை நாட்டிற்கு அழைத்து வர விரைவான நடவடிக்கைகள் அரசு செய்ய வேண்டும் - என்று கூறப்பட்டுள்ளது. (ஐ)

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு வலி. தென்மேற்கு சபை கண்டனம்!

யாழ்ப்பாணம், ஏப். 17

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்கு எதிராக கண்டன தீர்மானம் ஒன்றை வலி. தென்மேற்கு பிரதேச சபை நிறைவேற்றியுள்ளது.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களின் நாட்டுப் படகுகளை கட்டணம் செலுத்தி இலங்கை கடல் எல்லையில் அனுமதிப்பது என்ற கருத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட பல கட்சி உறுப்பினர்கள் இணைந்து நிறைவேற்றினர்.

இந்தக் கண்டனத் தீர்மானத்திற்கு ஈ.பி.டி.பி. கட்சியின் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன்போது ஏற்பட்ட குழப்பத்தை அடுத்து சபை அமர்வு 10 நிமிடம் ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர், சபை கூடியபோது ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர் லோ.ரமணன் அந்தப் பிரேரணையை கொண்டு வந்தார். இதற்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் தமது எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதன்போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டபோதும் குறித்த கண்டனத் தீர்மானம் சபையில் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (ஐ -3)

# வடமராட்சி கிழக்கில் வீசிய கடும்காற்றால் வாடிகள் சேதம்

வடமராட்சி, ஏப். 17

வடமராட்சி கிழக்கில் நேற்றுமுன்தினம் வீசிய கடும் காற்றால் மீன்பிடி வாடிகள் சேதமடைந்தன.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் கடும் காற்றுடன் மழை பெய்தது.

இதனால், அப்பகுதியிலுள்ள வாடிகள் சிலவற்றின் கூரைகள் பறந்து சேதமடைந்தன. அத்துடன், மீன்பிடி வலைகளும் இதனால் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இடி - மின்னல் தாக்கத்தால் வீதி விளக்குகள் பல வெடித்துச் சிதறின. அத்துடன், அப்பகுதி வீடுகளில் சுமார் 25 தொலைக்காட்சிகளும் பழுதடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-2)

# சிறுமி துஷ்பிரயோகம் இளைஞருக்கு வலைவீச்சு

கொழும்பு, ஏப். 17

முகப் புத்தகத்தில் நட்பான 13 வயது சிறுமியை தனியாக அழைத்துச் சென்று துஷ்பிரயோகம் செய்த இளைஞரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

குறித்த இளைஞர் காலியிலிருந்து நீர்கொழும்பில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றே துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

கொழும்பில் தனியாக நின்ற சிறுமியை பொலிஸார் மீட்டு நடத்திய விசாரணையிலேயே இந்த விடயம் தெரிய வந்தது. சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.04.2021 சனிக்கிழமை
சார்வரி, சித்திரை 04

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# மாவை சேனாதிராசாவின் தகுதி?

சில தினங்களுக்கு முன்னர் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண சபைக்கான பொது வேட்பாளர் தொடர்பில் தனது அபிப்பிராயத்தை தெரிவித்திருந்தார். தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் மேற்படி கருத்தை தெரிவித்திருந்தார். அண்மைக் காலமாக சிவில் சமூக செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திவரும் வேலன் சுவாமி என்றழைக்கப்படும் துறவி ஒருவரின் பெயரையும் குறிப்பிட்டிருந்தார். இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் பதவிக்கு தகுதியற்றவரென்று குறிப்பிட்டிருந்த விக்னேஸ்வரன், வேலன் சுவாமி என்பவரை தகுதியானவராகக் குறிப்பிட்டிருந்தார். அனைத்து கட்சிகளும் உடன்பட்டால் அதில் தனக்கு ஆட்சேபனையில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

விக்னேஸ்வரன் கூறுவதுபோல், 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபைத் தேர்தலின்போது, மாவை சேனாதிராசாவை தகுதியற்றவர் என்னும் அடிப்படையில்தான் சம்பந்தன் அவரை புறம்தள்ளியிருந்தார். ஆனால், விக்னேஸ்வரனின் தகுதி தொடர்பிலும் பின்னர் தமிழ் அரசு கட்சி அதிருப்தியடைந்தது. அந்த அடிப்படையில்தான் வடக்கு மாகாண சபையில் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்து, அவரை அகற்றுவதற்கு முயற்சித்தது. அந்த நேரத்தில், முன்னாள் ஆயுத இயக்கங்களான புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் ரெலோ ஆகியவையே விக்னேஸ்வரனை காப்பாற்றியிருந்தன. விக்னேஸ்வரனுக்கு எதிராக ஓர் அமைச்சர் நீதிமன்றம் வரையில் சென்றிருந்தார். உண்மையில், ஆரம்பத்தில் விக்னேஸ்வரனை தகுதியுள்ளவர் என சம்பந்தன் கருதியிருந்தாலும்கூட, பின்னர் அவ்வாறு கருதவில்லை. இதன் காரணமாகவே, விக்னேஸ்வரனுக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் சம்பந்தன் மௌனமாக ஆசிர்வதித்துக்கொண்டிருந்தார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருப்பதற்கான தகுதி நிலைகள் என்ன? கல்வியா - ஆங்கிலப் புலமையா - சர்வதேசத் தொடர்பா? எவை தகுதிகள்? உண்மையில், ஒரு மாகாண சபை முதலமைச்சர் என்பவர், மத்திய அரசாங்கத்தின் முகவராவார். அவர் தன்னைப் பற்றி எவ்வாறு எண்ணிக்கொண்டாலும்கூட, அதுவே உண்மையாகும். இந்த முறைமையே இந்தியாவில் இருக்கின்றது. இந்தியாவின் முறைமையே 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலம் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டது. இதன் காரணமாகவே இன்றும் சில சிங்கள - பௌத்த கடும்போக்குவாதிகள் 13ஆவது திருத்தச்சட்டம் என்பது, தங்களின் குரல்வளையை நெரித்துக் கொண்டுவந்த ஒன்று என வாதிட முயற்சிக்கின்றனர். எனவே, மாகாண சபையில் இருப்பவருக்கு தேவையான முதலாவது தகுதி, அவர் முடிந்தவரையில் மத்திய அரசாங்கத்துடன் நல்லுறவில் இருப்பவராக இருக்கவேண்டும். அவ்வாறில்லாதபோது, ஒருவரிடம் என்ன தகுதிகள் இருந்தும் பயனில்லை. மாகாண சபையில் இருந்துகொண்டு, இலங்கை இராணுவத்தை (இலங்கை அரசை) சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லப்போகின்றோம் - என்று முழங்கிக் கொண்டிருந்தால், நிச்சயம் மாகாண சபையை வினைத்திறனுடன் நிர்வகிக்க முடியாது. மாகாண சபையிலிருக்கும் தமிழ் அதிகாரிகள்கூட, முதலமைச்சருக்கு மனப்பூர்வமான ஒத்துழைப்பை வழங்க மாட்டார்கள். எனவே, மாகாண சபையில் முதலமைச்சராக இருப்பவர், ஆற்றலும் ஆளுமையுள்ளவராகவும் இருக்க வேண்டுமென்பதில் மாறுபட ஒன்றுமில்லை. ஆனால், அவரது ஆற்றல் மாகாண சபையை முடிந்த வரையில் மக்களுக்கு பயனுடைய வகையில் கையாள்வதற்கு பயன்படவேண்டும். அதற்காக எல்லாவற்றிலும் அல்ல. அவர் மத்திய அரசுடன் சுமூகமான உறவிலிருந்தால் மட்டுமே அது சாத்தியப்படும்.

மேலும், வடக்கு மாகாண தமிழ் மக்கள் ஒரு விடயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு இப்போது தேவை, சந்நியாசி மடமா அல்லது வினைத்திறன்மிக்க நிர்வாகத்தை முன்கொண்டு செல்லக்கூடிய நபர்களா? அதற்கு மாவை சேனாதிராசா பொருத்தமானவரா, இல்லையா? கடந்த காலத்தில் கட்சிக்குள்ளிருப்பவர்களை புறம்தள்ளியே, விக்னேஸ்வரன் போன்ற வெளியார்களை, கூட்டமைப்பினர் அரசியலுக்குள் கொண்டுவந்தனர். ஆனால், என்ன நடந்தது? அவர்களால் ஆளுமைமிக்க நிர்வாகத்தை வழங்க முடிந்ததா? இந்த நிலையில் விக்னேஸ்வரன் மற்றவர்களின் தகுதிநிலை தொடர்பில் கருத்துக்கூற முற்படுவது சரியானதுதானா?

# பௌத்த - சிங்கள தீவிரவாதம்!

- அலசுவது **இராஜதந்திரி** -

*எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் என்று குறிப்பிடப்பட்டு பதினோர் அமைப்புகளை தடைசெய்துள்ள இலங்கை அரசு, பௌத்த - சிங்கள அடிப்படைவாத போக்கைக் கொண்டுள்ள அடிப்படைவாத அமைப்புகளை ஏன் தடைசெய்யவில்லை? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்.*

*இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் பல, முழு உலகையுமே அச்சத்திலாழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதனை அண்மைக் காலங்களில் தெளிவாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலையில், இலங்கையும் தற்போது இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் என்று கண்டறியப்பட்ட பதினோர் அமைப்புகளை இலங்கையில் தடைசெய்துள்ளது. 2019ஆம் ஆண்டு கொழும்பு, நீர்கொழும்பு, மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் ஒரே நாளில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் 267 பேர் கொல்லப்பட்டனர். 500 பேர்வரை காயப்பட்டனர்.*

**இஸ்லாமிய அடிப்படைவாதம்**

*இப் பயங்கர உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களே இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாதம் வேரூன்ற ஆரம்பித்துள்ளதை புலனாய்வுத் தகவல்கள்மூலமாக எடுத்துக்காட்டியிருந்தன. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் 2019ஆம் ஆண்டு இடம்பெற்றுதுமே மூன்று இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் இலங்கையில் தடைசெய்யப்பட்டிருந்தன. இதனையடுத்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நெறிப்படுத்தலில் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு, இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளை தடைசெய்யுமாறு சிபார்சு செய்திருந்தது.*

*உயிர்த்த ஞாயிறு குறித்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகளுக்கு மட்டுமல்ல. பௌத்த-சிங்கள அடிப்படைவாத அமைப்பான பொதுபல சேனாவையும் தடைசெய்ய வேண்டுமென சிபார்சு செய்திருந்தது. பொதுபல சேனாவின் அடிப்படைவாத போக்கே இஸ்லாமிய அடிப்படை வாதத்துக்கு வழியமைத்திருந்ததாகவும் ஆணைக்குழு தெரிவித்திருந்தது.*

**பொதுபல சேனா**

*இருந்தபோதிலும், பொதுபல சேனாவை தடைசெய்ய அரசு பின்னிற்பதையே அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், இலங்கையில் முன்னெப்போதும் இல்லாதவாறு சிங்கள-பௌத்த தீவிரவாதப்போக்கு விழிப்படைந்துள்ளதையே காணமுடிகின்றது. பொதுபல சேனாவில் கைவைக்கும் பட்சத்தில், சிங்கள-பௌத்த தீவிரவாதிகள் தமது கைவரிசையைக் காண்பிக்க முடியும் என்பதையும் அரசு உணர்ந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.*

*பொதுபல சேனா மட்டுமல்ல. ஜாதிக ஹெல உறுமய, சிங்கள ராவய, சிறிலங்கா பொது ஜன பெரமுன, பிவிதுறு ஹெல உறுமய, சிங்கள உறுமய, சிங்கள மஹாசபா போன்றவை ஏனைய முக்கிய பௌத்த - சிங்கள தீவிரவாத அமைப்புகளாக இயங்கி வருகின்றன. பொதுபலசேனா அமைப்பே 2014ஆம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிரான தீவிரவாதப்போக்கை அப்பட்டமானமுறையில் வெளிப்படுத்திய அமைப்பாக இரக்கின்றது. தென்னிலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் பொதுபல சேனாவினால் முன்னனெடுக்கப்பட்டிருந்தன.*


*கலகொட அத்தே ஞானசார தேரர் என்ற பௌத்த துறவியின் தலைமையில் இயங்கும் பொதுபலசேன அமைப்பு, அரசின் ஆதரவை ஆரம்பத்தில் பெற்றிருந்தது. எனினும், காலப்போக்கில் பொதுபல சேனாவின் நடவடிக்கைகள் கட்டுமீறியதாக இருக்கின்ற நிலையில் இந்த அமைப்பே ஏனைய இன, மத ரீதியான தீவிரவாத அமைப்புகளுக்கு இடமளிக்கின்றது என்று உயிர்த்த ஞாயிறு குறித்து விசாரணை செய்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.*

**முஜிபுர் ரஹ்மானின் கோரிக்கை**

*எனவே, இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் என்று கண்டறியப்பட்ட பதினோர் அமைப்புகளை தடைசெய்துள்ள அரசு, பௌத்த - சிங்கள தீவிரவாத அமைப்புகளையும் தடை செய்யவேண்டுமென்பதே ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் நியாயமான கோரிக்கையாக இருக்கின்றது. இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு மட்டுமல்ல. தமிழ் தீவரவாதத்துக்கும் சிஙகள - பௌத்த அடிப்படைவாதமே வழியமைத்திருந்ததென்பதையும் சுட்டிக்காட்டவேண்டியுள்ளது. இந்தநாட்டில் முதலாவது அரசியல் கொலையாக விளங்கிய மறைந்த பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொலையைக்கூட அரங்கேற்றியது பௌத்த - சிங்கள தீவிரவாதமென்பது குறிப்பிடத்தக்கது.*

*ஆட்சியாளர்கள் சிங்கள - பௌத்த தீவிரவாத அமைப்புகளை ஆதரிப்பதை வெளிப்படையாக காண்பிக்காவிட்டாலும், மறைமுகமாக பௌத்த - சிங்கள அடிப்படைவாத அமைப்புகளைத் தடவிக்கொடுத்து தமக்குத் தேவைப்படும் சந்தர்ப்பஙகளில் அந்த அமைப்புகளை தட்டிக்கொடுத்து விடுவதையே அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில், முஜிபுர் ரஹ்மான் பாராளுமன்றத்தில் சிங்கள - பௌத்த தீவிரவாத அமைப்புகள் குறித்து தட்டிக்கேட்டுள்ளமை, அரசின் மறைமுகமான நடவடிக்கைகளை சுட்டிக்காட்டுவதாகவே காணப்படுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் - 17 சனிக்கிழமை
பிலவ வருடம் - சித்திரை - 04
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பஞ்சமி




**மேடம்**
சோர்வு நீங்கிச் சுறுசுறுப்பாகச் செயல்படும் நாள். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். மூத்தவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பீர்கள். நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர்.

**இடபம்**
பக்குவமாகப் பேசிப் பாராட்டுப் பெறும் நாள். பரபரப்பாகச் செயல்படுவீர்கள். பணத்தேவைகள் பூர்த்தியாகும். தொழில் சம்பந்தமாக தொலைதூரப் பயணங்களை மேற்கொள்ளும் சூழ்நிலை உண்டு.

**மிதுனம்**
தடைகளைக் கண்டு தளர்வடையாத நாள். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக விளங்குவர். சேமிப்பை உயர்த்த வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

**கடகம்**
அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலம் கிடைக்கும் நாள். குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். திடீர் பயணம் தித்திக்க வைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

**சிம்மம்**
வெளியுலகத் தொடர்பு விரிவடையும் நாள். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற கொள்கைப் பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்வீர்கள். நண்பர்களுக்காக செலவிடும் சூழ்நிலை உண்டு.

**கன்னி**
ஆரோக்கியம் சீராகும் நாள். ஆதாயம் எதிர்பார்த்தபடி கிடைக்கும். அலைபேசி வழியில் நற்செய்திகள் வந்து சேரும். தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
மனக்குழப்பம் அதிகரிக்கும் நாள். எதையும் தீர்க்கமாக முடிவெடுக்க முடியாமல் திணறுவீர்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வேலையாட்களிடம் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**விருட்சிகம்**
யோகமான நாள். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மாற்றினத்தவர்களால் மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரும். கூட்டுத் தொழில் தனித் தொழிலாக மாற எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**தனுசு**
தள்ளிப்போன செயல்கள் தானாக நடைபெறும் நாள். சமூகத்தில் உங்கள் மதிப்பும், மரியாதையும் உயரும். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**மகரம்**
தடைகள் விலகும் நாள். தனித்து இயங்க முற்படுவீர்கள். பால்ய நண்பர்களின் சந்திப்பால் பரவசம் ஏற்படும். அக்கம், பக்கத்து வீட்டாரின் ஆதரவு கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்**
இலட்சியங்கள் நிறைவேறும் நாள். மனக்குழப்பம் அகலும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும். புது முயற்சி வெற்றியைத் தேடித் தரும்.

**மீனம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்து சேரும். சொத்துகள் வாங்கும் முயற்சி வெற்றி தரும்.

# நடிகர் விவேக்குக்கு மாரடைப்பு வைத்தியசாலையில் சேர்ப்பு

சென்னை, ஏப். 17

திடீர் மாரடைப்பு காரணமாக நகைச்சுவை நடிகர் விவேக் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். தீவிர சிகிச்சைப் பிரிவில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தமிழ்த் திரையுலகின் முன்னணி நகைச்சுவை நடிகர் விவேக் (வயது-60). முதுகலைப் பட்டதாரியான நடிகர் விவேக் 1990 களில் பாலசந்தரால் அறிமுகப்படுத்தப்பட்டார். நகைச்சுவை நடிகர், குணச்சித்திர நடிகர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். சிறந்த மேடைப் பேச்சாளர்.

திரைப்படங்களை நகைச்சுவையாகக் கொண்டு செல்லாமல் சமூக அக்கறை உள்ள



கருத்துகளை நகைச்சுவை மூலம் மக்களிடையே கொண்டு செல்கிறார் விவேக். அவரது சமூக சீர்திருத்தக் கருத்துகளால் சின்ன கலைவாணர் என்று அழைக்கப்படுகிறார். சினிமாவைத் தாண்டி சமூக அக்கறை உள்ள விடயங்களைக் கையிலெடுத்துச் செயல்படுத்துகிறார்.

அப்துல் கலாம் மீது பற்று கொண்டதால் மரம் நடுவதில் ஆர்வம் காட்டி வருகிறார். தமிழக அரசின் டெங்கு விழிப்புணர்வு, கொரோனா விழிப்புணர்வு, தடுப்பூசி விழிப்புணர்வுக்குப் பிரசாரம் செய்தார் விவேக்.

நேற்றுக் காலை சாலி கிராமத்தில் உள்ள வீட்டில் இருந்த விவேக்குக்கு லேசாக நெஞ்சு வலி ஏற்பட்டது. இதையடுத்து அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் வீட்டிலிருந்து அம்புலன்ஸ் மூலம் வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இதய சிகிச்சை நிபுணர்கள் சிகிச்சை அளிக்கின்றனர்.

அவருக்கு லேசான மாரடைப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# அரச கட்டுமானங்களை ஆய்வுக்கு உட்படுத்துக!

## கமல்ஹாசன் கோரிக்கை



சென்னை, ஏப். 17

'தமிழகம் முழுதும், ஐந்தாண்டுகளில் கட்டப்பட்ட அரசு கட்டுமானங்கள் அனைத்தும், ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்' என, மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

கோவை உக்கடம், பெரிய குளத்தின் கரையில் கட்டப்பட்டிருந்த, 12 அடி உயர தடுப்புச் சுவர், ஒரு நாள் மழைக்கே இடிந்து விழுந்துள்ளது. இச்சுவர், 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தில் கட்டப்பட்டு ஆறு மாதங்களே ஆகிறது. ஆறு மாதத்தில் அடித்துச் செல்லப்படும் தடுப்பணை, கட்டும் போதே இடிந்து விழும் மருத்துவமனை, திறப்பு விழாவின் போதே நொறுங்கும், 'மினி கிளினிக்' சுவர் என, தொடரும், 'டெண்டர் அரசின்' சாதனை பட்டியலில், கோவை பெரிய குளம் தடுப்புச் சுவரும் இணைந்திருக்கிறது.

ஆயிரம் ரூபா, 'எலக்ட்ரிக் ஷவருக்கு' கூட, ஓர் ஆண்டு உத்தரவாதம் இருக்கிறது. கோடிக்கணக்கில் கேள்வி கோரல் விட்டு கட்டப்படும் கட்டுமானங்களுக்கு ஏன் உத்தரவாதம் இல்லை. 'இ-ரெண்டர்' கள் கூட சம்பந்திகளுக்கும், மச்சினன்களுக்கும் அளிக்கப்படும் மாயம் என்ன? இந்தக் கட்டுமானங்கள் இடிந்து விழுந்த பின், ஒப்பந்ததாரர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எத்தனை அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர்?

அடிப்படை வசதிகளே சரியாக இல்லாத நகரத்தில், அழகுப்படுத்தும் பணிகள் என்ற பெயரில் நடப்பதெல்லாம், சுரண்டல் தான் என்பதன் சாட்சியே, சுற்றுச்சுவர் இடிந்து விழுந்த சம்பவம்.கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழகம் முழுதும் கட்டப்பட்ட, அனைத்து அரசு கட்டுமானங்களும், கறாரான ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். போன பணம் போனது தான் என்றாலும், குறைந்தபட்சம் உயிரிழப்புகளையாவது தடுக்க, இந்த முன்னெச்சரிக்கை உதவும்-என்றார்.

# வாக்கு எண்ணும் மையங்களில் மர்ம லொறிகள் போக்குவரத்து

## தி.மு.க. முறைப்பாடு

சென்னை, ஏப்.17

வாக்கு எண்ணும் மையங்களில் லொறிகள் செல்லும் நிகழ்வுகளால் சர்ச்சையானது. தலைமை தேர்தல் அதிகாரியை சந்தித்து தி.மு.க நிர்வாகிகள் ஆ.ராசா, ஆர்.எஸ். பாரதி, பொன்முடி முறைப்பாடு அளித்தனர்.

இதன் பிறகு மூன்று பேரும் கூட்டாக அளித்த பேட்டி-

வாக்கு எண்ணும் மையங்களில் பாதுகாப்பை உறுதிபடுத்த வேண்டும். வாக்கு எண்ணும் மையங்களில் 12ஆம் வகுப்பு செய்முறை தேர்வு நடத்தப்படுகின்றது. ராமநாதபுரத்தில் வாக்கு எண்ணிக்கை நடக்கும் அறைகளுக்கு 31 பேர் மடிக்கணனியுடன் சிலர் சென்றனர். மையங்களுக்கு இரவு நேரத்தில் லொறிகள் சென்றுள்ளன. அமைச்சர்கள் போட்டியிடும் தொகுதிகளில் அதிகளவு முறைகேடு நடக்கிறது. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவை. வாக்கு எண்ணும் மையங்களில் விதிமீறல் நடக்கிறது. மத்திய, மாநில அரசுகள் சேர்ந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழுத்தம் கொடுக்கிறார்களோ என தோன்றுகிறது. தேர்தல் ஆணைக்குழு மீது நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது-என்றனர்.

# தஞ்சை பெரிய கோயில் பூட்டு

தஞ்சாவூர், ஏப். 17

கொரோனா வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, உலக புகழ் பெற்ற தஞ்சாவூர் பெரிய கோயில், தாராசுரம் ஐராவதீஸ்வரர், கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில்கள் மூடப்பட்டன.

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக, தமிழகத்தில் அதிகம் பேர் கூடுவதை தவிர்க்கும் வகையில், மத்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்கள் வரலாற்று நினைவுச் சின்னங்கள் சுற்றுலா தளங்கள் மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, மக்கள் அதிகம் கூடும் இடங்களை மூடி, தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. உலகப் புகழ் பெற்ற, தஞ்சை பெரிய கோயிலுக்கு வெளிநாட்டினர் உட்பட, தினமும் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். இந்நிலையில், மத்திய தொல்லியல் துறையின் கீழ் உள்ள சுற்றுலா தலங்களை, மே 15ஆம் திகதி வரை மூட உத்தரவு பிறப் பித்து, மத்திய அரசு கடிதம் அனுப்பியது.

தஞ்சை பெரிய கோவில் தொல்லியல்துறை நிர்வாகத்தால் பூட்டப்பட்டது. இதனால் பக்தர்கள் இன்றி வெறிச்சோடி கிடக்கின்றது.

இந்நிலையில், பெரிய கோயில் நுழைவு வாயிலில் அறிவிப்பு விளம்பரம் வைக்கப்பட்டு, கோயில் மூடப்பட்டது. கோயிலுக்கு வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அதேநேரம், கோயில் ஆகமவிதிப்படி, தினமும் நான்கு கால பூஜைகள் வழக்கம் போல் நடைபெறும் என அறநிலையத் துறை மற்றும் தொல்லியல் துறையினர் அறிவித்தனர். இதேபோல், கும்பகோணம் அருகே தாராசுரத்தில், இந்திய தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும், ஐராவதீஸ்வரர் கோயிலும் மூடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹாட்லி மாணவர்கள் இரத்ததானம்

வடமராட்சி, ஏப். 17

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 2010 கல்வியாண்டில் கற்ற மாணவர்களினால் இரத்ததான முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

அதே கல்வியாண்டில் கல்வி கற்று அமரத்துவமடைந்த வசீகரன், பிரதீபன் ஆகியோர் ஞாபகார்த்தமாக அவர்களுடன் கல்விகற்ற மாணவர்களினால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாடசாலை மாநாட்டு மண்டபத்தில் இவ் இரத்ததான முகாம் நடத்தப்பட்டது.

பாடசாலை அதிபர் த.கலைச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரத்தவங்கிப் பிரிவினர் கலந்துகொண்டு குருதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

(அ-2)

## இலங்கைக்கு தடுப்பூசி வழங்க பல்வேறு நாடுகள் முன்வருகை

அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 17

இலங்கைக்குக் கொரோனாத் தடுப்பூசிகளை வழங்க பல்வேறு நாடுகளும் முன்வந்துள்ளன என்று அரச மருந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையில் அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது எனவும் அவர் கூறினார்.

ஆனால், நோய்ப் பரவலுக்கான அபாயம் முற்றாக நீங்கிவிடவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முதலாவது கொரோனா அலையைக் கட்டுப்படுத்த அரசால் முடிந்திருந்தது. மக்கள் கூடுதலாக நடமாடும் இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

திருமண நிகழ்விலும், இறுதிக்கிரியைகளிலும் மக்கள் கூடுதலான நேரம் தங்கியிருக்கக்கூடாது.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறுகின்றது-என்றார்.

# தொலைபேசியில் அழைத்துத் திட்டி என்னை அச்சுறுத்தினார் ஜனாதிபதி

விஜயதாஸ ராஜபக்ஷ பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்.17

**''கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித விளக்கமும் வழங்கப்படவில்லை. இரகசியமாகவே அது கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, இச்சட்டமூலத்தால் நாட்டுக்கு ஏற்படும் பாதிப்புகளை நேற்று(நேற்றுமுன்தினம்) அம்பலப்படுத்தினேன். துறைமுகநகர் சீனாவின் கொலனியாகும் நிலையை தடுக்க வேண்டும் எனவும் கூறினேன்.**

இன்று(நேற்று) காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எனக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தினார். கடும் சினத்துடன், மிகவும் கீழ்த்தரமாக என்னை விமர்சித்தார். அரச தலைவர் ஒருவருக்கு பொருத்தமற்ற விதத்தில் அவர் செயல்பட்டதாலும் ஜனாதிபதி கையாண்ட பாஷையிலேயே நானும் பதில் கொடுத்தேன். ஜனாதிபதி இவ்வாறு அச்சுறுத்துவது பாரதூரம். உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

-இவ்வாறு ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தனது இல்லத்தில் நேற்று காலை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுக நகரத்தை சட்டமூலமொன்றின் ஊடாக சீனாவிடம் கையளிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இவ்வாறு செய்வதன் ஊடாக சீனாவுக்கு சொந்தமான தனியான நாடாகவே துறைமுக நகரம் மாறிவிடக் கூடிய அபாயம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே இன்று (நேற்று) தன்னை தொலைபேசியில் அழைத்த ஜனாதிபதி அச்சுறுத்தும் வகையில் மிகவும் இழிவான வார்த்தைகளைப் பயன்படுத்தி திட்டித் தீர்த்ததாக விஜயதாஸ ராஜபக்ஷ கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தபோது கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் குறித்து விவாதிக்கவே அவர் அழைப்பதாக நான் கருதினேன்.

ஆனால், அவர் என்னைக் கடுமையாக அச்சுறுத்தினார். பாராளுமன்ற உறுப்பினரான என்னை அவர் அச்சுறுத்தியமையை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாது. அவரது அச்சுறுத்தலால் எங்களுடைய சொந்த வாழ்க்கை, குடும்பத்தின் பாதுகாப்பு குறித்து அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தல் குறித்து இலங்கை பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளேன். ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஒரு கோப் அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வேளை எனது வீட்டில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. எனது வீடு சுற்றிவளைக்கப்பட்டது. கடுமையான அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அந்த நேரத்தில் எனது வீட்டிற்கு வரும் அனைத்து தொலைபேசி அழைப்புகளையும் இராணுவம் கண்காணித்து பதிவு செய்தது-என்றார்.

## மக்களின் கவனத்தை திசைதிருப்பி மீண்டும் ஒரு சிங்கள-பௌத்த அரசு அமைக்க முயற்சி

மனோ கணேசன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 17

இந்த அரசு தமது பௌத்த அமைப்புகளை தடை செய்யப் போகிறது என்ற புரளியை கிளப்பி மக்களின் கவனத்தை திசை திருப்ப சில பௌத்த கடும்போக்குவாத தேரர்கள் முயன்று வருவதாக தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பெங்கமுவே நாலக தேரர், அஸ்கிரிய அனுநாயக தம்மானந்த தேரர், ரத்தன தேரர், முருத்தெடுகம ஆனந்த தேரர், சிங்கள ராவய தேரர், ஞானசார தேரர், ராவண பலய தேரர் ஆகிய பௌத்த தீவிரர்கள் இப்போது புதிய பாடல் ஒன்றை பாடுகிறார்கள்.

இந்த அரசு தமது பௌத்த அமைப்புகளை தடை செய்ய போகிறது என்ற புரளியை கிளப்பி மக்களின் கவனத்தை திசை திருப்புகிறார்கள் எனவும் சமூக ஊடகத்தில் நேற்று இட்டுள்ள பதிவில் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் இந்நாடு உருப்படவேண்டுமானால், பௌத்த தேரர்கள் அரசியலில் தலையிடுவதை தடை செய்யத்தான் வேண்டும். நான் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரிப்பேன். ஆனால், இந்த அரசு இப்போது இவர்களை தடை செய்து தற்கொலை செய்ய போவதில்லை.

முஸ்லிம் அரசியல்வாதிகள், குறிப்பாக முன்னாள் அமைச்சர்கள் ரிசாத், ரவுப் மீது, உயிர்த்த ஞாயிறு குண்டு தொடர்பில் குற்றம் சாட்டப்பட வேண்டும் என இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆனால், அதற்கான சாட்சியம் இல்லை. அப்படி சாட்சியங்கள் இருந்தால், இந்த அரசே சும்மா விடாது. தேரர்களிடம் சாட்சியம் இருந்தால் அதை விசாரணை கமிசனிடம் அவர்கள் தர வேண்டும். ஆனால், அப்படி இவர்களிடம் ஆவணங்கள் எதுவும் இல்லை.

தமிழ், முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் மட்டுமே இருக்கிறது. தமிழ், முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி பேசும் இவர்கள் தமது அடிப்படைவாத, இனவாதத்தை தேசபக்தியாக காட்டுகிறார்கள் எனவும் மனோ கணேசன் கூறியுள்ளார்.

ஆகவே இன்று, அரசின் பிரதான கட்சியில் உள்ள தீவிரவாதிகளையும், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட நபர்களையும் கொண்டு, எதிரணியிலும் சிங்கள பௌத்த தீவிரர்கள் கிடைத்தால், அவர்களையும் சேர்த்து, இந்த அரசின் மீதான சிங்கள மக்களின் அதிருப்தியை திசை திருப்பி, மீண்டும் ஒருமுறை சிங்கள பௌத்த அரசு ஒன்றை அமைக்க முயல்கிறார்கள். அதாவது இன்னொரு சுற்று வர முயல்கிறார்கள்.

இனிவரும் மாற்று அரசு, ஒரு சிங்கள பௌத்த அரசாக இருப்பதை நாம் ஏற்க முடியாது. உலகமும் ஏற்காது. அது ஒரு இலங்கை அரசாக மட்டுமே இருக்க முடியும்.

இல்லாவிட்டால் அடுத்த இரண்டு வருடத்தில், இலங்கை நாடு அரசியல், சமூக, பொருளாதார துறைகளில் தோற்றுப்போன நாடாக உலகில் ஒதுக்கப்படும். அதன்பிறகு சாம்பலில் இருந்து எழுந்து வர வேண்டியதுதான் எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

## மருமகனை அடித்து கொன்ற மாமனார்

வெதமுல்லை தோட்டத்தில் கொடூரம்

கண்டி, ஏப். 17

கொத்மலை வெதமுல்ல தோட்டத்தின் கெமினிதென்ன பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.வாய்த்தர்க்கம் முற்றியதில் மாமனார் மருமகனை பொல்லால் தாக்கியுள்ளார்.

இதன்போது காயமடைந்த மருமகன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொத்மலை வெதமுல்ல தோட்டத்தின் கெமினிதென்ன பிரிவில் வசித்த 35 வயதான கணேசன் விஜயகுமார் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் 1990 என்ற அவசர இலக்கத்துக்கு அழைப்பெடுத்து அறிவித்த நிலையில் நோயாளர் காவு வண்டி அங்கு வரத் தாமதமானதால் தாக்குதலை நடத்திய மாமா தனது ஓட்டோ மூலம் காயமடைந்தவரை நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்துள்ளார்.

இவ்வாறு கொண்டு செல்லும்போது நோயாளர் காவு வண்டி இடையில் வந்துள்ளது.

அப்போது நோயாளர் காவு வண்டியில் வந்தவர்கள் காயமடைந்தவரை பரிசோதித்தபோது அவர் உயிரிழந்தமையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதன் பின்னர் தாக்குதலை நடத்தியவர் சடலத்தை கண்டி - நுவரெலியா பிரதான வீதியில் வீசிவிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பில் தாக்குதலை நடத்திய மாமனாரை கொத்மலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நுவரெலியா மாவட்ட நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் நுவரெலியா பொது வைத்தியசாலையின் பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கிஸை கடற்கரையில் ஒதுங்கியது டொல்பின்!

கொழும்பு, ஏப். 17

கல்கிஸை வெடிகந்த கடற்கரையில் நேற்று முன்தினம் இரவு பாரிய டொல்பின் மீன் ஒன்று கரையொதுங்கியுள்ளது.

20 அடி நீளமான இந்த மீனின் தலை மற்றும் செட்டைகள் சிதைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த மீன் சில நாட்களுக்கு முன்னர் உயிரிழந்து, பின்னர் கரையொதுங்கியிருக்கலாம் என அப்பிரதேசத்துக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (அ)

# எஸ்.ரி.எவ். துப்பாக்கிச் சூட்டில் அதிகாலை இருவர் படுகாயம்!

## வடமராட்சியில் நேற்று சம்பவம்

**யாழ்ப்பாணம்,ஏப்.17**

**சிறப்பு அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் சிக்கி படுகாயமடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.**



வடமராட்சி கிழக்கு முள்ளிப் பகுதியில் நேற்று காலை இந்தச் சம்பவத்தில் துன்னாலை பகுதியை சேர்ந்த பழனி மிகுந்தன் (வயது- 28), ஜெயக்குமார் சந்திரகுமார் (வயது- 30) ஆகியோரே படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனம் ஒன்றில் மணல் கடத்தலில் ஈடுபட முற்பட்ட போதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, மணல் கடத்தல்காரர்கள் தப்பியோடுவதற்காக சிறப்பு அதிரடிப் படையினரை தாக்கினர் என்றும், அதில் அதிரடிப்படை உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

# ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சை பெறுபேறு இம்மாத இறுதியில்

கொழும்பு, ஏப். 17

நடைபெற்று முடிந்த கல்வி பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளை இந்த மாத இறுதியில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப் பட்டு, மூன்று மாத காலப் பகுதிக்குள் பல்கலைக்கழக பிரவேசத்திற்கான வெட்டுப் புள்ளிகளை வெளியிட எதிர் பார்க்கப்படுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உயர் அதிகாரி இதுகுறித்த தகவலை வெளியிட்டுள்ளார்.

# குருந்தூர் மலையில் இந்து மக்கள் வழிபட நடவடிக்கை எடுப்போம்

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 17

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்புப் பகுதியில் அமைந்துள்ள தமிழர்களின் பூர்வீக வழிபாட்டுத்தலமான குருந்தூர் மலையில், இந்து மக்கள் வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

குருந்தூர் மலையில் தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் வழக்கொன்றைத் தொடர்வது தொடர்பில், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மற்றும் கரைதுறைப் பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் கடந்த 30.01.2021 அன்று பாராளுமன்ற உறுப்பினர் மதிப்புறு எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அன்று வழக்குத் தொடர்வதற்கான ஆவணங்கள் சிலவற்றைக் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைச் சந்தித்து வழக்குத் தொடர்வது தொடர்பான முக்கிய ஆவணங்கள் சிலவற்றினை கையளித்திருந்தனர்.

இச் சந்திப்பினையடுத்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

குருந்தூர்மலை சம்மந்தமாக சில வருடங்களுக்கு முன்பிருந்தே ஒரு பிணக்கு ஏற்பட்டது. அது தொடர்பாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றிலே வழக்கொன்று தாக்கல்செய்யப்பட்டு அதிலே ஓர் இணக்கப்பாடு எய்தப்பட்டிருக்கின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தொல்லியல் திணைக்களத்தினர், அமைச்சரோடு வந்து அங்கே இருந்த வழிபாட்டுச் சின்னத்தை அகற்றி ஒரு புத்தர் சிலையை வைத்து புதியதாக தொல்பொருள் ஆராட்சி என்று ஆரம்பித்துள்ளார்கள்.

ஆகையினாலே இது தொடர்பாக வழக்கு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக, கடந்த 2018ஆம் அண்டு தாக்கல்செய்யப்பட்ட AR/673/18 என்ற வழக்கின் ஆவணப் பிரதியை முழுமையாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் என்னிடம் கையளித்திருக்கின்றார்.

அந்தவகையில் இது தொடர்பான அடுத்தடுத்த நடவடிக்கைகள், அதாவது அந்த இடத்திலே இந்து மக்கள் சென்று வழிபடுவதற்கான முழு உரித்தையும் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம் - என்றார்.

# மது அருந்திய இருவர் பலி!

## புதுவருட கொண்டாட்டத்தில் விபரீதம்

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு கொண்டாட்டத்தில் மது அருந்திய இருவர் திடீரென உயிரிழந்தனர். ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கலென்பிந்துநுவெவ பிரதேசத்தின் படிகரமுல்ல, ரத்மல் வெட்டிய பகுதியில் நேற்று முன் தினம் இரவு இந்த அதிர்ச்சி சம்பவம் நடந்தது.

வீடொன்றில் நடந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட மூவர் மது அருந்திக்கொண்டிருந்த போது, மூவரும் மயக்கமடைந்தனர்.

அவர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படும்போது, இருவர் உயிரிழந்தனர்.

மயக்கமடைந்த மற்ற நபர் கலென்பிந்துநுவெவ மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மது விசமடைந்ததால் இந்த சம்பவம் நடந்திருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# வாகன விபத்துகளில் நாளாந்தம் இறப்போரின் எண்ணிக்கை 11!

கொழும்பு, ஏப். 17

புத்தாண்டு காலத்தில் வாகன விபத்துக்களை தடுப்பது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு போக்குவரத்து அமைச்சு பொதுமக்களை கேட்டுள்ளது.

இலங்கையில் வருடாந்தம் மூவாயிரத்துக்கும் அதிகமான விபத்துகள் இடம்பெறுகின்றன. 2018 ஆம் ஆண்டில் வாகன விபத்துக்களின் மூலம் 3,154 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன், 2019 ஆம் ஆண்டில் 2,852 பேரும் 2020 ஆம் ஆண்டு ஆறு மாத காலத்தினுள் 1242 பேரும் வாகன விபத்துக்களினால் உயிரிழந்தனர்.

கடந்த காலங்களில் நாளாந்தம் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் மூலம் எட்டுக்கும் பத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் உயிரிழந்தனர். ஆனால் தற்போது இந்தத் தொகை 11 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், 201ஆம் ஆண்டு வாகன விபத்துக்களின் மூலம் அங்கவீனமுற்றவர்களின் எண்ணிக்கை 9,391 ஆகும். 2019 ஆம் ஆண்டளவில் அது 11 ஆயிரம் வரை உயர்ந்துள்ளது. (அ)

# கண்டியில் 878 பேர் பாதிப்பு

கொழும்பு, ஏப். 17

நாடளாவிய ரீதியில் பெய்து வரும் கடும் மழைக் காரணமாக, 204 குடும்பங்களைச் சேர்ந்த 878 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென, அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கண்டி உதவி பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்துள்ளார்.

இதற்கமைய கண்டி மாவட்டத்துக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கண்டியில் கங்கவட்ட கோரல,மெததும்பர, பாத்ததும்பர,பாத்த ஹேவாஹெட்ட, ஹரிஸ்பத்துவ ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளே அதிகம் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# ஹல்துமுல்லையில் நீரில் மூழ்கி தந்தையும் மகனும் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 17

ஹல்துமுல்லை - களுபஹன பகுதியில் நீரில் மூழ்கி காணாமல் போன இருவர் சடலமாக மீட்கப்பட்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் நேற்று முன் தினம் இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளனர்.

களுபஹன - வெலிஓயா பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் நீராடச் சென்ற நிலையிலேயே அவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தனர்.

மஹரகமைப் பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய தந்தையும், 14 வயதுடைய மகனுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்

இதேவேளை, அவர்களுடன் இணைந்து நீரில் மூழ்கியிருந்த மேலும் இரண்டு பேர் நேற்று முன்தினம் உயிருடன் மீட்கப் பட்டனர்.

அத்துடன், காணாமல்போயிருந்த இருவரையும் மீட்பதற்கான பணிகளில், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் ஐயனார் கோவிலில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 17

கொக்குவில் ஐயனார் கோயிலில் உண்டியல் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கொழும்பு அரசியலில் பரபரப்பு தொடர்கிறது!

## மைத்திரியுடன் சங்கமிக்கின்றார் எஸ்.பி.?



கொழும்பு, ஏப்.17

**சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவுக்கும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.**

கொழும்பிலுள்ள மைத்திரிபால சிறிசேனவின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது இருவரும் மனம்விட்டு பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எஸ்.பி. திஸநாயக்க, நல்லாட்சியின்போது மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசியாகவே செயல்பட்டார். இதனால்தான் பொதுத்தேர்தலில் தோல்வியுற்றிருந்தாலும் தேசியப்பட்டியல் ஊடாக எஸ்.பிக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அமைச்சுப் பதவியையும் மைத்திரி வழங்கினார்.

எனினும், மைத்திரிபாலவுக்கு நெருக்கடி ஏற்பட்டு, ராஜபக்ஷ அலை மீண்டும் உருவானபோது, மைத்திரியை கைவிட்டு ராஜபக்ஷக்களுடன் எஸ்.பி. சங்கமித்தார். இதனால் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்பட்டார்.

2020இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் 'மொட்டு' கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தாலும் எஸ்.பிக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகூட வழங்கப்படவில்லை. அரசியலில் நெடுநாள் அனுபவம் கொண்ட-பல அமைச்சுப் பதவிகளை வகித்த எஸ்.பிக்கு மாவட்ட தலைவர் பதவி மட்டும் வழங்கப்பட்டமை பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

அதேபோல் அண்மைக்காலமாக அரசின் செயற்பாடுகளையும் அவர் விமர்சித்து வருகின்றார். எனவே, விரைவில் அவர் சுதந்திரக் கட்சியில் மீண்டும் இணையக்கூடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. எஸ்.பியுடன் செல்வதற்கு சில மாகாண சபை உறுப்பினர்களும் தயார் நிலையில் இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தடை செய்த அமைப்பினரை கைது செய்ய நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 17

தடைசெய்யப்பட்ட 11 தீவிரவாத அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைக் கைது செய்ய சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அமைப்புகளின் உறுப்பினர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை கடந்த 14 ஆம் திகதி முதல் கடுமையாக்க பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

அவர்கள் கடல் வழியாக தப்பிப்பதைத் தடுக்க பாதுகாப்பை கடுமையாக்க கடற்படைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், உளவுத்துறை நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

தடை செய்யப்பட்ட அமைப்புகளுக்குள் உள்ள முக்கிய நபர்கள், ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளதால், அவர்களை கைது செய்ய சி.ஐ.டி மற்றும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதே நேரத்தில், நாட்டை விட்டு வெளியேற முயற்சிப்பவர்களை அடையாளம் காண விமான நிலையத்தில் உளவுத்துறை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. கடவுச்சீட்டுகளை மோசடி செய்து நாட்டை விட்டு வெளியேறும் நபர்களை அடையாளம் காண நேற்று முன் தினம் சிறப்பு முறைகள் அமுலாகியுள்ளன. கைது செய்யப்படுபவர்கள் குற்றச்சாட்டுகளைப் பொறுத்து சட்ட நடவடிக்கை அல்லது மறுவாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் உட்பட்டவர்களை புனர்வாழ்வு செய்வதற்காக வவுனியாவில் ஏற்கனவே ஒரு புனர்வாழ்வு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட பதினொரு அமைப்புகளின் வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துக்களைத் தடை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் விபத்தில் சிக்கிய இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணத்தின் கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் வரணி எல்லைப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளைஞன் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

கடந்த 11ஆம் திகதி இரவு குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் கொடிகாமம் சென்றுவிட்டு வரணி நோக்கிச் செல்லும்போது வீதியால் சென்ற சைக்கிளுடன் மோதியே விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தினால் பலமாக அடியுண்ட இளைஞன் கோமா நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் உயிரிழந்தார். வரணி தாவளை இயற்றாலையைச் சேர்ந்த தவராசா டிலோஜன் (வயது - 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த விபத்து அதிவேகம் காரணமாக இடம்பெற்றதாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

## அரச பெருந்தோட்டங்களில் இன்னும் சம்பள உயர்வு வழங்கப்படவில்லை

### ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 17

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் இழுப்பறி நிலையை சந்திக்கும் என்று ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளது. அதாவது எமது கடலில் உள்ள அனைத்து வளங்களையும் அள்ளிச் செல்லும் அளவுக்கு அவர்களின் ஆக்கிரமிப்பு உள்ளது. எதிர்காலத்தில் எமக்கு கடல் வளம் அற்று போகும் நிலைமை உருவாகியுள்ளது.

இந்திய மீனவர்கள் எமது கடல் வளத்தை அழித்தும் சூறையாடியும் வருகின்றனர். நாம் இந்த மீனவர் பிரச்னை சம்பந்தமாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அண்மையில் சந்தித்து பேசியுள்ளோம். இதன்போது இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு முடிவு எடுக்கப்படும் என அமைச்சர் கூறினார். ஆனால், இதுவரை தீர்வை வழங்காமையால் வடக்கு மீனர்கள் அனாதரவாக்கப்பட்டுள்ளனர்.

இப்போது முன்பைவிட மோசமாக இந்திய மீனவர்கள் இத்துமீறும் நிலை உருவாகியுள்ளது. இந்த பிரச்னையில் இந்தியா இரட்டை வேடம் பூண்டுள்ளது. விசேடமாக தமிழக அரசியல் தலைவர்கள் இந்த பிரச்னைக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் நிலையுள்ளது. ஆகவே இவ்வாறு செயல்பட வேண்டாம் என நாம் கேட்டுக்கொள்கின்றோம். இலங்கை என்பது சுயாதீன நாடு என்றவகையில் எமது கடற்பரப்பை கொள்ளையடிக்க வேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம். எனவே ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர் ஆகியோர் எமது கடல் வளத்தை பாதுகாக்க முன்வர வேண்டும்.

1000 ரூபா சம்பள அதிகரிப்பு உறுப்படியாக கிடைக்கின்றதா? என சந்தேகம் எழுந்துள்ளது. தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கையில் எந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. சித்திரை புத்தாண்டை கொண்டாட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையே தோட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, ஆயிரம் ரூபாவுக்கு அரசாங்கமும், தொழிற்சங்கங்களும் உத்தரவாதத்தை வழங்க வேண்டும். இன்றும் சிலர் 1000 ரூபாவுக்கு வேட்டு வைக்க சிலர் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே ஆயிரம் ரூபா அதிகரிகரிப்பை அரசாங்கம் முதலில் அரச தோட்டங்களில் வழங்க வேண்டும்-என்றார்.

## இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மன்னார் மீனவர்களை விடுவிக்கக் கோரிக்கை!

மன்னார், ஏப். 17

இந்திய கடல் எல்லைக்குள் எல்லை தாண்டி வருகை தந்ததாக கடந்த மாதம் 10 ஆம் திகதி மன்னார் பேசாலை பகுதியைச் சேர்ந்த ரவீந்திரன் அருண் குரூஸ், வெலிசோர் றேகன் பாய்வா ஆகிய இரு மீனவர்களும் இந்திய கரையோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சென்னையில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் சம்மந்தப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் தினேஸ் குணவர்தனவுக்கு குறித்த மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கக் கோரி அவசர கடிதம் ஒன்றை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் ஊடாக கையளித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட மீனவர்கள் இருவரும் கடந்த 10 திகதி காலை 5 மணியளவில் வழமை போன்று கடல் தொழில் நடவடிகையில் ஈடுபட கடலுக்கு சென்ற நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக இந்திய கடல் பகுதிக்குள் சென்றதாகவும், தற்போது அவர்கள் இந்தியாவில் சென்னையில் உள்ள புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு சிறையில் மிகவும் கஸ்ரப்படுவதாகவும் அங்குள்ள சட்டத்தரணி ஒருவர் மூலமாகவே தற்போது தாங்கள் அவர்களை தொடர்பு கொள்வதாகவும் சட்டத்தரணி ஊடாக பிணை கோரியபோதும் அது வழங்கப்படவில்லை எனவும் கைது செய்யப்பட்ட மீனவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

எனவே தற்போது குறித்த விடயம் தொடர்பாக மீன்பிடித்துறை அமைச்சர் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு அறியப்படுத்தியுள்ளதாகவும், அமைச்சர் மற்றும் இலங்கை-இந்தியத் தூதரகங்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு சிறையில் இருக்கும் தனது கணவனை விடுவித்து தருமாறும் மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

மீனவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பாக பேசாலை பொலிஸ் நிலையம் மற்றும் மன்னார் மனித உரிமை ஆணைக்குழுவின் உப காரியாலயத்தில் பாதிக்கப்படவரின் குடும்பத்தினரால் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலிபாபாவுக்கு அபராதம்: ஐ.ரி. நிறுவனங்களுக்கு சீனா எச்சரிக்கையா?

**கரிஷ்மா வாஸ்வானி**
பி.பி.சி

சீன தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு இது ஒரு கடினமான வாரம்தான்.

வார இறுதியில் சீன கட்டுப்பாட்டா ளர்கள் ஜாக் மாவின் இணைய வர்த்தக நிறுவனமான அலி பாபாவிற்கு 2.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 52 ஆயிரம் கோடி ரூபா அபராதமாக விதித்தனர்.

பல வருடங்களாக தனது போட்டியாளருக்கு எந்த வர்த்தக வாய்ப்பும் செல்லவிடாமல் தடுத்ததாக விசாரணை ஒன்றில் தெரியவந்ததால் அலிபாபா விற்கு இந்த அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

அலிபாபாவின் இணை நிறுவனமான டிஜிற்றல் பண பரிவர்த்தனை தொழில் செய்யும் ஏஎன்ரி குழுமம், தனது நிறுவனத்தை மீண்டும் கட்டமைக்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. அரசின் ஒழுங்குமுறை அமைப்பு, ஏ.என்.ரி குழுமம் தொழில்நுட்ப நிறுவனத்தை போல அல்லாமல் ஒரு வங்கியை போல செயல்பட வேண்டும் என்று கூறியதால் இந்த திட்டத்தை அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

மேலும் கடந்த செவ்வாய்க்கிழமை, சீன தொழில்நுட்பத்துறையில் உள்ள 34 நிறுவனங்களின் பிரதிநிதிகளை நோட்டீஸ் அனுப்பி அழைத்த அதிகாரிகள், "அலிபாபா உங்களுக்கு ஒரு பாடமாக இருக்கட்டும்," என்றும் எச்சரித்துள்ளனர்.

அந்த நிறுவனங்கள் 'சுய பரிசோதனை' செய்து கொண்டு புதிய விதிகளை பின்பற்ற ஒரு மாத கால அவகாசத்தையும் சீனா வழங்கியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கும் சேவை வழங்குவோருக்குமான தளமாக செயல்படும் நிறுவனங்கள்தான் பிளாட்போர்ம் நிறுவனங்கள்.

சீனாவின் தொழில்நுட்ப துறையில் அசைக்க முடியாத ஜாம்பவானாக உள்ள நிறுவனம் அலிபாபா. சீனாவில் மட்டும் அந்த நிறுவனத்திற்கு 800 மில்லியன் பயன்பாட்டாளர்கள் உள்ளனர். எனவேதான் அலிபாபா நிறுவனத்துக்கு அபராதம் விதிக்கப்பட்டது, பிற நிறுவனங்களுக்கு ஓர் எச்சரிக்கை ஒலி போன்றது.

அலிபாபா குறித்த விசாரணையில், அந்நிறுவனம் தனது போட்டி நிறுவனத்தில் வியாபாரிகள் எந்த வியாபாரமும் செய்யவிடாமல் தடுத்ததாக கூறப்படுகிறது. அந்த நிறுவனத்தின் 2019ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு வருவாயில் 4 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. பெரு நிறுவனங்கள் அலிபாபாவை தொடர்ந்து தங்களுக்கு இந்த நிலை வரலாம் என அஞ்சுகின்றன.

**கட்சியை காட்டிலும் யாருக்கும் அதிகாரம் இல்லை**

இன்னொரு புறம் பார்த்தால் சீனாவில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறையில் கண்காணிப்பை தீவிரப்படுத்தியிருக்கும் அரசின் ஒழுங்குமுறை அமைப்பு, அந்த நிறுவனங்களை விட ஓர் அடி முன்னோக்கி தமது நடவடிக்கையை முடுக்கிவிட முற்பட்டிருப்பதை, சம்பந்தப்பட்ட சட்டங்களை படித்தால் புரியும்," என சீனாவின் தொழில்நுட்ப ஆய்வாளர் ருயி மா தெரிவித்துள்ளார்.

"இம்மாதிரியான நிறுவனங்களை புரிந்து கொண்டு, வளர்ந்த பொருளாதாரங்களின் நிலையை கடைபிடிக்க கண்காணிப்பாளர்கள் முயற்சித்து வருகின்றனர்," என்றார் ருயி மா.

ஆனால், இந்த நடவடிக்கையில் அரசியல் நோக்கங்களும் உள்ளன.

அதிபர் ஷி ஜின்பிங்கின் ஆட்சியில் தனி ஒரு மனிதனின் வாழ்க்கையில் சீனாவின் கம்யூனிஸ்ட் கட்சியை காட்டிலும் யாருக்கும் அதிகாரம் இல்லை என்பதை விலக்குவதாக இந்த நடவடிக்கை உள்ளது.

இந்த நிறுவனங்கள் சீனர்களின் வாழ்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த செயலிகளில் ஒன்றை பயன்படுத்தாமல் ஒரு நாளும் கடந்து செல்வதில்லை சீன மக்கள்.

எனவே இந்த செயலிகள் சீனர்களின் வாழ்க்கையில் செலுத்தும் தாக்கத்துடன்தான் சீன கம்யூனிஸ்ட் கட்சியும் போட்டியிடுகிறது.

**பேச்சால் வந்த சிக்கல்**

பாரம்பரிய வங்கி முறையை ஒழிக்கும் நடைமுறை குறித்து கடந்த வருடம் ஜாக் மா பேசிய பேச்சு பீஜிங்கில் உள்ள முக்கிய அதிகாரிகளை எரிச்சலடைய வைத்தது என சீன நிதித்துறையில் உள்ள செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த பேச்சால் ஜாக் மாவின் அலிபாபா மற்றும் அண்ட் குரூப் குறித்து சீன அரசு ஊடகம் விமர்சனங்களை வெளியிட்டது.

அதன்பிறகு ஜாக் மா மற்றும் அவரின் குழுவினருக்கு சம்மன் வழங்கப்பட்டது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அண்ட் குரூப்பின் பங்குச் சந்தை தொடக்கம் கைவிடப்பட்டது.

ஜாக் மாவின் அந்த பேச்சால் அவருக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டதாக கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த நிகழ்ச்சிக்கு பிறகு அலிபாபா மற்றும் அண்ட் ஆகிய நிறுவனங்கள் வரையறையை வகுக்க தொடங்கின.

முதலீட்டாளர்கள் ஆலோசனை ஒன்றில், அலிபாபாவின் நிர்வாக துணைத் தலைவர் ஜோ சாய், "முன்னோக்கிச் செல்லும் நேரத்தில், சர்வதேச அளவில் நியாயமற்ற போட்டிகள் நடைபெறும் இடங்களை கண்காணிப்பாளர்கள் கூர்ந்து கவனித்து கொண்டிருக்கிறார்கள்," என்றார்.

**கட்டுப்பாடற்ற வளர்ச்சி**

சீனாவின் தொழில்நுட்ப நிறுவனங்கள் எந்த கட்டுப்பாடும் இல்லாமல் அல்லது வெகு சிறிய கட்டுப்பாடுகளில் மட்டுமே உருவானவை.

எந்தவித ஒழுங்கு நெறிமுறைகளும் இல்லாமல் இந்த நிறுவனங்கள் வளர்ந்து கொண்டிருந்தன. பல காலங்களுக்கு அரசும் அதனை ஊக்குவித்தது.

"சீனாவில் தொழில்முனைதல் மற்றும் மாற்று வர்த்தகத்தை ஊக்குவிக்க பல தேசிய திட்டங்கள் அமல்படுத்தப்பட்டன," என்கிறார் ஹொங்காங் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக பணியாற்றும் ஏங்கலா சாங்.

அவர் சீன சட்டத்தில் நிபுணத்துவம் பெற்றவர். மேலும் சமீபத்தில் சீனாவின் நம்பிக்கையற்ற விதிவிலக்குவாதியம் என்ற புத்தகத்தை எழுதியவர்.

"கடந்த காலங்களில் கட்டுப்பாட்டாளர்கள் இத்தனை கடுமையாக நடந்து கொள்ளவில்லை. ஆனால். தற்போது சீனா இந்த நிறுவனங்களுக்கு கடிவாளம் போட நினைக்கிறது.

இந்த நிறுவனங்களிடம் கடினம் காட்டவே சீனா விரும்புகிறது. இருப்பினும் தங்க முட்டையிடும் வாத்தை சீனா கொல்ல விரும்பாது," என்கிறார் ஏங்கலா சாங்.

**'குரங்கை அச்சுறுத்த கோழியை கொன்ற கதை'**

"குரங்குகளை பயமுறுத்த கோழிகளை கொன்ற கதை என சீனாவில் ஒரு பழமொழி உண்டு. பிற தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு பாடம் புகட்ட அலிபாபாவை ஒரு எடுத்துக்காட்டாக சீனா பயன்படுத்துகிறது. சீன தலைவர்களை பொறுத்தவரை பொருளாதாரம் சிறந்து விளங்கவே அவர்கள் விழைகின்றனர். அரசுக்கு வளர்ச்சிதான் முக்கியம். எனவே அலிபாபா குறித்த நடவடிக்கை பிற நிறுவனங்களை ஒழுங்குமுறைக்குள் கொண்டு வரும்," என்கிறார் ஏங்கலா.

இந்த கட்டுப்பாடுகள் தற்போது பெரிய நிறுவனங்களால் நசுக்கப்படும் சிறிய நிறு வனங்களுக்கு உதவியாக இருக்கும் என ஆய்வாளர் ருயி மா தெரிவிக்கிறார்.

"உள்ளூரில் உள்ள சிறு முதலீட்டாளர்கள் இந்த கட்டுப்பாடுகள் குறித்து ஆதரவாக பேசுகின்றனர், இந்த நடவடிக்கைகளால் இளம், புதிய நிறுவனங்களுக்கு இது வரை கிடைக்காத ஒரு வாய்ப்பு கிடைக்கும் என நினைக்கிறேன்." என்கிறார் ருயி மா. ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் போகின்றதா?

எழுவான் வேலன்

தேர்தல் முடிந்து வெல்பவர்கள் வென்று பதவியை எடுப்பவர்கள் எடுத்ததன் பின் அவரவர் வேலைகளை அவரவர் பார்க்கத் தொடங்கிவிட்டோம். இனி அடுத்த தேர்தலுக்கு பழைய கொப்பியை எடுத்து தூசி தட்டி அரசியல் பாட ஆரம்பித்து விடுவோம். கொஞ்சப் பேர் தங்களால் வென்றவருக்கு மீண்டும் கொடிபிடிப்போம் அல்லது ஆளை நம்பி ஏமாந்து விட்டோம் எனப் புலம்பி அடுத்தவரையோ அல்லது அடுத்த கட்சியையோ ஆதரிக்க ஆரம்பித்து விடுவோம்.

வேட்பாளர்களும் வாக்காளர்களின் மறதியை நம்பி அடுத்த தேர்தலிலும் சென்ற தேர்தலில் கூறப்பட்ட வாக்குறுதிகளை புதிய வடிவம் கொடுத்து வாக்குக் கேட்பார்கள். நாமும் புதிய வடிவத்துக்கு முன்னையதிலும் பார்க்க அதிக உற்சாகத்துடன் ஆதரவளித்து வாக்குப் போடுவோம்.

இந்த வகையான ஒரு ஜனநாயகத் தேர்தலைத்தான் நாம் காலாகாலமாக கடைப்பிடித்து வருகின்றோம்.

வேட்பாளர்களும் எமது இந்த ஜனநாயக முறைக்கேற்பதான் தங்களுடைய அரசிலை நடத்துகிறார்கள். இதைத் தவிர்த்து வேறு என்ன எங்களால் செய்யமுடியும் என்பதும் அல்லது இந்த நடைமுறையிலிருந்து மாறமுடியாமல் இருப்பதும்தான் எமது ஜனநாயக அரசியலாக இருக்கின்றது. இந்த ஜனநாயக அரசியலில் கடந்த தேர்தலின் போது பேசப்பட்ட பின்வரும் விடயங்கள் தொடர்பாக இப்பத்தி கவனத்தைக் குவிக்கின்றது.

**கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல்**

கடந்த தேர்தலின் போது கிழக்கில் அதிகம் பேசப்பட்ட விடயம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்துதலாகத்தான் இருக்கமுடியும். சென்ற வருடம் இந்த பிரதேச செயலகம் தரமுயர்த்தல் தொடர்பாக நடாத்தப்பட்ட உண்ணாவிரதத்தின் போது எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஓடோடி வந்தனர். நல்லாட்சி அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமருடன் பேசியிருக்கின்றோம், மிக விரைவில் தரமுயர்த்தப்படும் அதன் முதற்கட்டமாக தனியான கணக்காளர் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்ற கதைகளெல்லாம் கூறினார்கள். ஆனால் நல்லாட்சி அரசாங்கம் வீட்டுக்குச் செல்லும்வரை கூட்டமைப்பினரால் கூறப்பட்ட எந்தவொரு செயற்பாடுகளுமே நடைபெறவில்லை.

கருணா (முரளிதரன்), வியாழேந்திரன், அங்கஜன் இராமநாதன் போன்றோர் இவ்விடயத்தில் மக்களை அதிகம் நம்பவைத்தனர். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூட ஜனாதிபதித் தேர்தலில் தங்களுடைய வேட்பாளர் வெற்றிபெற்றதும் உடனடியான தரமுயர்த்தப்படும் என்ற வாக்குறுதியையும் வழங்கியிருந்தார். ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின் அவர்கள் கூறிய காரணம் 'அம்பாறை மாவட்டத் தமிழர்கள் சஜித் பிரேமதாஸவுக்கே அதிகம் வாக்களித்துள்ளனர். இந்த வாக்களிப்பின் மூலம் அவர்கள் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படுவதை விரும்பவில்லை என்பதை எடுத்துக் கூறியுள்ளார்கள். ஆகவே. அவர்களுக்கு விருப்பம் இல்லாத ஒன்றை நாம் செய்யமுடியாது அவர்களுக்கு மேலும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றோம் பாராளுமன்றத் தேர்தலில் எம்மை அவர்கள் வெற்றியீட்ட வைப்பார்களேயானால் அதன் பிறகு தரமுயர்த்தலாம்' என்று கூறியதாக ராஜபக்ஷ அணியினருக்கு நெருக்கமானவர்கள் கூறினார்கள்.

அவர்கள் கூறியதை மெய்ப்பிப்பது போலவே ஜனாதிபதித் தேர்தல் முடிந்து இவ்விடயம் தொடர்பாக அவர்கள் எவ்வித நடவடிக்கைகளுமே எடுக்கவில்லை. அம்பாறை மாவட்ட பாராளுமன்றத் தேர்தலில் கருணா வாக்குக் கேட்பதற்குக் கிடைத்த பலமான காரணங்களில் ஒன்று இப்பிரதேச செயலகம் தரமுயர்த்தல் என்பதாகும். இதுவே அவருக்கு கல்முனைத் தொகுதியில் அதிகமான வாக்குகளை பெறுவதற்கும் காரணமாகும். இதுபோன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தோல்விக்கும் இதுவேதான் காரணமாகும்.

தேர்தல் முடிந்தது, கருணா அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான தமிழ் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்லாத போதும் ராஜபக்ஷவினரின் வேண்டுகோளை நிறைவேற்றியிருந்தார். அவரை அம்பாறை மாவட்டத்துக்கான பிரதமரின் இணைப்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நியமனம் வழங்கி கௌரவப்படுத்தினார். ஆனால், அவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதி பற்றி இவ்விருசாராரும் எதுவுமே செய்ததாக அறிய முடியவில்லை.

வியாழேந்திரன் கூட்டமைப்பில் இருந்தபோதும் கூட்டமைப்பிலிருந்து விலகி, மகிந்த அணியுடன் சேர்ந்து கொண்ட போதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உடனே தனது கறுப்புச் சட்டை அணியினருடன் களத்தில் குதிப்பவராக இருந்தார். தேர்தல் முடிந்து இராஜாங்க அமைச்சர் ஆனவுடன் அவரை தமிழ் மக்களின் எந்தவொரு பிரச்சினைகளிலும் காணமுடியவில்லை. இராஜாங்க அமைச்சரானவுடன் தமிழ் மக்களின் எல்லாப் பிரச்னைகளும் முடிந்து விட்டது போல அவர் வாகன அணியுடன் வலம்வந்து கொண்டிருக்கிறார்.

இறுதியாக பிள்ளையான், இவர் கல்முனை வடக்கு பிரதேச செயலக உண்ணாவிரதப் போராட்டங்களின் போது சிறையிலிருந்தாலும் இந்த விடயங்களைத் தெரியாதவர் அல்ல. அத்துடன் மகிந்த அளித்த வாக்குறுதிகளில் ஒன்று தாம் ஆட்சிக்கு வந்தால் பிள்ளையானை விடுதலை செய்வேன் என்பதாகும். அவர் கூறியது போல பிள்ளையான் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவரால் வழங்கப்பட்ட கல்முனை பிரதேச செயலக வாக்குறுதிக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. மகிந்த அணியினருடன் மிக நெருக்கமான உறவைக் கொண்டிருக்கின்ற பிள்ளையானுக்கு இவ்விடயம் தொடர்பாக ஒரு தார்மீகக் கடமை இருக்கிறது. அந்த தார்மீகக் கடமையைத்தானும் அவர் செய்வதற்கான எத்தனங்களைக் காண முடியவில்லை.

**அபிவிருத்தி அரசியல்**

இன்று அரசுடன் சேர்ந்தியங்குகின்ற மேலே குறிப்பிட்ட அனைவரும் குறிப்பிட்ட ஒரு விடயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறான அரசியல் நடவடிக்கைகளால் தமிழ் மக்களும் அவர்களுடைய பிரதேசங்களும் எவ்வித அபிவிருத்தியுமின்றி இருப்பதுடன் மக்களும் வறுமையில் வாடுகின்றனர். நாம் ஆட்சிக்கு வந்தால் இப் பிரதேசங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதுடன் தொழில் பேட்டைகளை அமைத்து இம் மக்களுடைய சமூக பொருளாதார அம்சங்களை கட்டியெழுப்புவோம் எனக் கூறினார்கள். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உரிமையில்லாத அபிவிருத்தி எம் மக்கள் விரும்பவில்லை. காப்பெற், கொங்கிறீட் வீதி அமைப்பதெல்லாம் ஓர் அரசின் கடமையே தவிர அது ஒன்றும் விசேட சலுகைகள் அல்ல எனக் கூறினர்.

இவ்விருவாதங்களையும் செவிமடுத்த மட்டக்களப்பு வாக்காளர்கள் தங்களுக்கு உரிமையும் வேண்டும் அபிவிருத்தியும் வேண்டும் என்பதற்கு இணங்க, உரிமை தொடர்பாக செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இருவரையும் அபிவிருத்தி சார்பாக செயற்படுவதற்கு அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கக் கூடிய இருவருமாக, சரிசமமாகத் தேர்வு செய்து அனுப்பினர்.









இந்த இரு விடயங்களிலும் மட்டக்களப்பு மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள் போலத்தெரிகிறது. உரிமைக்காக தேர்வு செய்யப்பட்டவர்கள் தங்களுடைய எதிர்கால அரசியல் இருப்பை அடிப்படையாகக் கொண்டு 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை' போன்ற நடைமுறைச் சாத்தியமற்ற காலாவாதியாகிப்போன போராட்டங்களில் மக்களை ஈடுபடுத்துவதில் முனைப்புக்காட்டுகிறார்களே தவிர தற்போதுள்ள சூழ்நிலையினைப் பயன்படுத்தி அல்லது தங்களுடைய சட்ட அறிவையும் மும்மொழியாற்றலையும் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கான அரசியல், பொருளாதார உரிமைகளை எவ்வாறு பெற்றுக்கொடுக்கலாம் என்பது தொடர்பாக எவ்வித கரிசனையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அடுத்து அபிவிருத்திக்காக தேர்வு செய்யப்பட்ட இரு உறுப்பினர்களும் என்ன செய்கிறார்கள் என்பது எமது அடுத்த கேள்வியாகும். வீதி அமைத்தல்,பாலம் கட்டுதல் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளுக்கப்பால் விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்ற எமது நாட்டில் விவசாயத்தை ஒரு கைத்தொழில் மட்டமாக மாற்றுவதும் அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுப்பதுவும் முக்கியமாகின்றது. இது தொடர்பாக எவ்வகையான திட்டங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்பது தொடர்பாக தெளிவில்லாமலே இருக்கின்றது.

அத்துடன் 1980களில் எல்லைக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் இதுவரை தங்களுடைய விவசாய நிலங்களுக்கு திரும்ப முடியாத நிலையே காணப்படுகின்றது. தங்களுடைய காணிக்கான சகல ஆவணங்களும் அவர்களிடம் இருந்தும் அந்த மக்களுடைய காணிகளை பெரும்பான்மையினத்தவரே குறிப்பாக ஊர்காவல் படையினைச் சேர்ந்தவர்களே அந்தக் காணிகளை ஆட்சிபுரிகின்றனர். காணிகளை இழந்த தமிழ் மக்கள் தனிப்பட்ட முறையில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுக்க முற்படுகின்றபோது அரச பயங்கரவாதம் அவர்களை அச்சுறுத்துகின்றது.

இதுபோன்றே, அண்மைக்காலமாக மேய்ச்சல் தரைப் பிரச்னை மட்டக்களப்பில் மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருக்கின்றது. எனக்குத் தெரிந்த சிலர் தங்கள் கால்நடைகள் மேய்ச்சலுக்குப் போய் திரும்பிவராததால் இருக்கின்ற கால்நடைகளையும் அறாவிலைக்குக் கொடுத்து விட்டு, அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்கள். மேச்சலுக்காக கால்நடைகளைக் கொண்டு சென்றால் மேய்ச்சல் தரையற்ற வனவிலங்குப் பகுதிக்குள் நுழைந்ததாக வனவிலங்கு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டு அம்பாறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுகிறார்கள்.

ஆகவே, அரசாங்கத்துடன் இணைந்திருப்பது என்பது அந்த அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுகபோகங்களை அனுபவிப்பதற்கு மட்டுமல்ல அந்த அரசாங்கத்தினை பயன்படுத்தி சமூகத்தின் கடைநிலையிலுள்ளவர்களும் மகிழ்ச்சிகரமாக வாழ்வதற்குமாகும். இதனைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்துடன் இணைந்திருப்பவர்கள் தங்களுடைய அரசியல் செயல்பாட்டினை முன்னெடுக்க வேண்டும். •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**43**

## 2009 - (25,26)

25. 200 இன் அறைவாசியின் 4 உடன் 5 ஐக் கூட்டும் போது கிடைக்கும் எண் யாது?
    1. 25  2. 30  3. 35

26. 41 தொடக்கம் 45 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 4 எழுதப்படும் தடவைகள் யாது?
    1. 4  2. 5  3. 6

## 2010 - (20)

20. ஒரு கயிறு இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு. அவற்றில் ஒரு பகுதி மறுபடியும் நான்கு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. அத்துண்டுகளில் ஒன்றின் நீளம் 1 மீற்றர் எனின், தொடக்கத்தில் இருந்த கயிற்றின் நீளம்.
    (1) 8மீற்றர்  (2) 5 மீற்றர்  (3) 4மீற்றர்

## 2011 - (22,23)

22. பிழையான கோவையைத் தெரிவுசெய்க.
    (1) 6x6- 6 = 30  (2) 5 x 5 + 5 = 30  (3) 33 - 33 - 3 = 30

23. சரியான கோவையைத் தெரிவு செய்க.
    (1) 888 + 88 + 88 + 8 + 8 = 1000
    (2) 888 + 88 + 8 + 8 + 8 = 1000
    (3) 888 + 88 + 88 + 8 + 8 + 8 = 1000

## 2014 - (35)

35. இவ்விரு பாத்திரங்களையும் மாத்திரம் பயன்படுத்தி 4லீற்றர் நீரைச் சரியாக அளக்க முடியுமா?




1. முடியும்
2. முடியாது
3. விடை அளிப்பதற்கு மேலும் தகவல்கள் தேவை


## 2015 - (22,28)

22. ஒரு சைக்கிளை வாங்குவதற்கு ரூ. 8500 தேவைப்பட்டது. என்னிடம் ரூ. 4800 இருந்தது. மீதியை இரு நண்பர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பெற்றுக் கொண்ட பணம்
    1. ரூ. 2400 உம் ரூ. 1300 உம் ஆகும்
    2. ரூ. 2500 உம் ரூ. 2300 உம் ஆகும்
    3. ரூ. 5200 உம் ரூ. 3300 உம் ஆகும்

28. 100 தொடக்கம் 110 வரையுள்ள எண்களை எழுதும் போது "0" எழுதப் படும் தடவைகளின் எண்ணிக்கை
    1. 9  2. 10  3. 12

## 2016 - (6,10,20,23,34)

06. ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதிதாளில் உள்ள கூட்டுத் துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. கூட்டுத்துண்டுக்கு ஏற்க 1, 2 ஆகியனவாக இருக்கத்தக்க முறையே யாவை?




1. உற்பத்தி செய்த திகதியும் சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும்
2. சந்தைக்கு வழங்கப்பட்ட திகதியும் காலாவதியாகும் திகதியும்
3. உற்பத்தி செய்த திகதியும் காலாவதியாகும் திகதியும்

10. " திடசங்கற்பம்" என்னும் சொல்லில் உள்ள சில எழுத்துக்களைக் கொண்டு ஆக்கத்தக்க கருத்துள்ள சொல்.
    1. கபடம்  2. கப்பம்  3. சாகசம்

**இதற்கான விடைகள் நாளை வெளிவரும்**

ஆசிரியர் அன்னமையா - 076 056 5786

# நாள்தோறும் 15 பேர் விபத்துக்களால் பலி!

## பொலிஸார் அதிர்ச்சித் தகவல்



கொழும்பு,ஏப்.17

**நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 16 பேர் உயிரிழந்தனர். அத்துடன், சுமார் 80 பேர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர். இதன் மூலம் அண்மைக்காலமாக நாள்தோறும் 15 பேர் வீதம் வீதி விபத்துக்களால் உயிரிழக்கின்றனர் என்ற அதிர்ச் சித் தகவலையும் பொலிஸார் வெளிப்படுத்தியுள்ளனர்.**

இதேவேளை, கடந்த 24 மணிநேரத்தில் உயிரிழந்தவர்களில் 8 பேர் நேற்றுமுன்தினம் நடந்த விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்கள் என்றும் ஏனையோர் அதற்கு முன்னர் நடந்த விபத்துக்களில் சிக்கி படுகாயமடைந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் கடந்த 15 ஆம் திகதி வீதி விபத்துக்களில் சிக்குண்ட 14 பேர் உயிரிழந்ததுடன், 74 பேர் காயமடைந்ததாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஒட்டுமொத்தமாக 48 மணிநேரங்களில் வீதி விபத்துக்களில் சிக்குண்ட 30 பேர் உயிரிழந்ததுடன், 150 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் அதிகளவானோர் மோட்டார் சைக்கிள் சாரதிகள் என்றும் பொலிஸார் தெரிவித்தார். (எ)

# வயலில் வேலை செய்துகொண்டிருந்த விவசாயி மின்னல் தாக்கி உயிரிழப்பு!

## மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு,ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரைப் பிரதேசத்தின் வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையர்கட்டு கிராமத்தில் மின்னல் தாக்கியதில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயி ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

தற்போது அப்பகுதியில் சிறுபோக வேளாண்மைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் மும்முரமாக வயலில் வேலை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை நண்பகல் வரைக்கும் அப்பகுதியில் கடும் உஷ்னத்துடன் வெயில் காணப்பட்டது. ஆனாலும் மாலை வேலையில் திடீரென அப்பகுதியில் பலத்த இடி மின்னல், மற்றும் காற்றுடன் மழை பெய்திருந்தது.

இந்நிலையில் மாலையர்கட்டு கிராமத்தில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்னல் தாக்கி 32 வயது ஒரு பிள்ளையின் தந்தையான நல்லதம்பி மோகனசுந்தரம் எனும் விவசாயி உயிரிழந்தாரென அப்பகுதி கிராம சேவகர் தெரிவித்தார்.

இந்நிலையில், சடலம் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் வெல்லாவெளி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ)

# மலையக வீதிகளில் பாறை, மண்மேடு சரிந்து விழும் சம்பவங்கள் அதிகரிப்பு

கொழும்பு - பதுளை பிரதான வீதி, நுவரெலியா - பதுளை வீதி வாகனப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுவோர் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

மாலை வேளையில் இந்தப் பகுதிகளில் அதிக பனிமூட்டம் காணப்படுவதால் வாகனப் போக்குவரத்தின் போது மிகுந்த கவனம் செலுத்துமாறும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

மத்திய மலையகப் பிரதேசம் உட்பட நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மழை காரணமாக வீதிகளிலும் ரயில் பாதைகளிலும் மண்மேடுகள் சரிந்து வீழ்ந்துள்ளன. பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல, ஹாலிஎல உள்ளிட்ட பிரதேச செயலக பிரிவுகளில் இந்நிலை காணப்படுகின்றது.

இதேவேளை, கொழும்பு - பதுளை பிரதான வீதியில் மரங்கஹவெல, ஹல்தும்முல்ல, தியதலாவ போன்ற பிரதேசங்களிலும் வெலிமட - பதுளை வீதியில் ஹாலிஎல, அம்பவக்க, மொரேதொட்ட பிரதேச வீதிகளிலும் மண்மேடு சரிந்து வீழ்ந்தமை மற்றும் கற்பாறைகள் வீழ்ந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. (எ)

# சிவில் உடையில் பொலிஸார் கடமையில்

கொழும்பு,ஏப்.17

பொதுமக்கள் உரிய முறையில் சுகாதாரப் பரிந்துரைகளை பின்பற்றுகின்றார்களா, என்பதைக் கண்டறிய நேற்று முதல் நாடு பூராகவும் பொலிஸார் சிவில் உடையில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முகக் கவசம் அணிதல் உட்பட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளிவாசல் பொறுப்புக்களிலிருந்து அடிப்படைவாதிகள் விலக வேண்டும்

## அரசின் தடையையடுத்து நடவடிக்கை

கொழும்பு,ஏப்.17

**அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டுள்ள இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் உடனடியாக பள்ளிவாசல்களின் பொறுப்புக்களிலிருந்து விலக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

வக்பு சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த அமைப்புக்களிலுள்ள உறுப்பினர்கள் உடனடியாக, அந்தந்த பொறுப்புக்களிலிருந்து விலக வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சர்வதேச ரீதியில் இயங்கும் 11 இஸ்லாமிய அமைப்புக்களுக்கு அண்மையில் இலங்கை அரசாங்கம் தடை விதித்தது.

இந்தத் தடை உத்தரவு அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் கடந்த 13ஆம் திகதி அரசாங்கத்தால் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

# 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் வேலைத்திட்டம் நேற்றுடன் பூர்த்தி

## சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.17

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக அரசாங்கத்தால் 5000 ரூபா கொடுப்பனவு வழங்கும் வேலைத் திட்டம் நேற்றுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

98 வீதமானோருக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கிறது. சில பயனாளர்கள் வீடுகளில் இல்லாதால் இந்தக் கொடுப்பனவை வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தல் காரணங்களுக்காக கொழும்பு மற்றும் குருநாகலில் இரண்டு சமுர்த்தி வங்கிகள் மூடப்பட்டிருக்கின்றன. இதனால், 37 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்க முடியவில்லை எனவும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் மேலும் ஒருவர் கைது

கொழும்பு,ஏப்.17

கொழும்பு - வத்தளை ஹுனுபிட்டி பகுதியில் 2 கிலோ கிராமுக்கும் அதிக நிறையுடைய ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

ஐஸ் போதைப்பொருள் தொடர்பில் வத்தளை பகுதியில் இடம்பெற்று வரும் சோதனைகளின் விளைவாக கைது செய்யப்பட்ட 13 ஆவது சந்தேகநபர் இவர் ஆவார்.

கடந்த சனிக்கிழமை 113 கிராம் ஐஸ் மற்றும் 101 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் ஒருவரும், ஞாயிற்றுக்கிழமை 15 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு சந்தேக நபர்களும் ஜா-எல பகுதியில் கைதுசெய்யப்பட்டனர்.

அதேபோல் மேலும் 5 சந்தேகநபர்கள் திங்களன்று சபுகஸ்கந்த பகுதியில் 110 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே தற்சமயம் ஹுனுபிட்டி பகுதியில் 28 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இதன்படி, ஏப்ரல் 10 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தமாக 13 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதன்போது 128 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டது.(எ)

# மணல் அகழ்வு கொள்ளையை அரச அதிபர் தடுக்கவில்லை!

## கருணாகரம் எம்.பி. கவலை



மட்டக்களப்பு,ஏப்.17

மட்டக்களப்பு மாவட்டத்தை பாதிக்கக்கூடிய பேசு பொருளாக இருப்பது மணல் அகழ்வுக் கொள்ளை - கடத்தலாகும். ஆற்றுமணல் அகழ்வுக் கொள்ளைக் கடத்தலை மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவரோ, அரசாங்க அதிபரோ கண்டும் காணாமல் இருப்பது வேதனைக்குரிய விடயமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் இடம்பெறும் ஆற்றுமணல் அகழ்வுக் கொள்ளை தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆற்றுமண் படுக்கைகளை அளவுக்கு மீறி அகழ்ந்து மண் வியாபாரத்தை நடாத்துவதனால் பல பிரச்சினைகளும் ஆர்ப்பாட்டங்களும் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவர். தற்போது ஆற்றுமண் படுக்கைக்கு மேலாக வயல் காணிகளை திருத்தப்போகின்றோம் என்று அனுமதி பெற்று, வயல் காணிகளில் முப்பது அடிக்கு மேலாக ஆற்றுமணலை அகழ்ந்து கொண்டு செல்கின்றார்கள்.

ஒரு நாளைக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 1000 கனரக வாகனங்கள் வெளி மாவட்டங்களை நோக்கிச் செல்வது மாத்திரமல்லாமல் ரயில் (தொடரூந்து) பெட்டிகளிலும் மண்ணை கொண்டு செல்கிறார்கள். இதனால் மட்டக்களப்பு மாவட்டம் எதிர்காலத்தில் அழிந்துவிடும் ஒரு நிலைமை இருக்கின்றது.

ஆறுகளில் அளவுக்கதிகமான ஆற்றுமணலை அகழும் போது ஆறு ஆழமாவதனால் வயல்களுக்கு ஆற்றுநீரைப் பாய்ச்சுவது மிகவும் கடினமான ஒரு செயலாக இருக்கின்றது. செங்கலடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கள்ள மண் ஏற்றும் வியாபாரம் மிகவும் தீவிரமாக இடம்பெறுவதனால், ஆற்றிலிருந்து வழமையாக நீர் பாய்ச்சும் வயல்களுக்கு நீரைப் பாய்ச்ச முடியாமல் ஆற்றுக்குள் இருந்து நீர் பெறும் நீர்ப் பம்பிகளை பொருத்தி வயல்களுக்குள் நீர்ப் பாய்ச்ச வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக ஆறுகளை கவனிக்கும் நீர்ப்பாசன திணைக்களப் பொறியியலாளர்கள் பிரதேச, மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டங்களில் கலந்து கொண்டு ஆற்றுமண் அகழ்வுக் கொள்ளை கடத்தல் இடம்பெறுவதை கண்டனத்துக்குரிய செயலாக கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

பொண்டுகள்சேனை செல்லும் வழியிலுள்ள மிகப் பிரதான பாலத்தின் அத்திபாரம் ஏழு அடி மண்ணுக்குள் இருக்க வேண்டும். ஆனால், தற்போது அந்தப் பிரதேசத்திலேயே தொடர்ச்சியாக மணல் அகழ்வதால் இரண்டு அடியே மண்ணுக்குள் இருப்பதாகவும், தொடர்ச்சியாக அந்தப் பிரதேசத்தில் மணல் அகழும் நிலைமையிருந்தால், இன்னும் ஒரு வருடத்துக்குள் பாலம் இடிந்துவிழும் நிலைமையும் காணப்படுகின்றது.

கடந்த போராட்ட காலங்களிலே வாகரை, செங்கலடி, வவுணதீவு, பட்டிப்பளை, போரதீவுப்பற்று போன்ற பிரதேச செயலகங்கள் பாதிக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படாமலுள்ள நிலையில், இவ்வாறான பிரதேசங்களிலேயிருந்து மணல் அகழ்ந்து வெளி மாவட்டத்திற்கு கொண்டு செல்லப்படுவதனால் அந்தப் பிரதேசத்தின் பாதைகள் சிதைவடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது- என்றார்.(எ)

# அரசாங்கம் கவிழும் என்று கனவுகாண வேண்டாம் சஜித்துக்கு பீரிஸ் பதில்

கொழும்பு, ஏப் 17

நாட்டு மக்களின் அமோக ஆணையுடன் நிறுவப்பட்ட சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

'எதிர்வரும் 19ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் நடைபெறவுள்ள கூட்டத்துடன் அரச கூட்டணி பிளவடைந்தே தீரும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தது தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு குறுக்கு வழியால் நிறுவப்பட்ட அரசு அல்ல. நாட்டு மக்களின் ஆணையுடன் - மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறுவப்பட்ட அரசாகும். எனவே, அரசிலுள்ளவர்கள் மக்களின் ஆணையை மீறிச் செயல்படமாட்டார்கள். இந்த அரசு கவிழும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகல் கனவு காணக்கூடாது. அரசைப் பிளவடையச் செய்வது எதிரணியினரின் நீண்டநாள் சதித் திட்டம். இதற்கு அரசிலுள்ள பங்காளிக் கட்சியினர் எவரும் துணைபோக மாட்டார்கள்" என்றார்.

# ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.17

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி மேலும் அதிகரித்துள்ளது என மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்துக்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 201.28 ரூபாயாக பதிவாகியுள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று வீதத்துக்கமைய அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 195.72 ரூபாயாக பதிவாகியுள்ளது. (எ)

# மழையுடனான காலநிலை தொடரும்

கொழும்பு,ஏப்.17

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலநறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்த பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மழை நிலைமை: நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காற்று: நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்களில் காற்றானது தென்மேற்கு திசையில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது 20-30 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

கடல் நிலை: நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புக்கள் சாதாரண முதல் மிதமான அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பிரான்ஸ் நாட்டவருக்கு எதிராக பாகிஸ்தானில் வன்முறை உச்சம்!

### பிரெஞ்சுகாரரை வெளியேற அறிவுறுத்து

இஸ்லாமாபாத், ஏப். 17

பாகிஸ்தானில் தங்கியுள்ள பிரெஞ்சு பிரஜைகளை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு பிரான்ஸ் அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

பிரெஞ்சு எதிர்ப்புப் போராட்டங்கள் பாகிஸ்தானில் தீவிரமடைந்து வருவதை அடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நபிகள் நாயகத்தை அவதூறாக சித்தரிக்கும் கார்ட்டூனை பிரெஞ்சு பத்திரிகை ஒன்று வெளியிட்டமை சர்ச்சையானது. இதற்கு உலகெங்கும் உள்ள இஸ்லாமியர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். எனினும், அது பத்திரிகையின் உரிமை என பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்தது. அத்துடன், அந்தப் பத்திரிகைக்கு ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோனின் அரசு ஆதரவளித்து வருகின்றது.

இதையடுத்து, இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் பிரெஞ்சு எதிர்ப்பு போராட்டம் பல மாதங்களாகத் தொடர்ந்து வருகின்றது. இந்நிலையில், இந்தப் போராட்டம் இந்த வாரத்தின் தொடக்கத்தில் வன்முறையாக மாறியது. இதனால், பிரான்ஸ் நிறுவனங்கள், பிரெஞ்சு பிரஜைகளை நாட்டை விட்டு தற்காலிகமாக வெளியேறுமாறு பாகிஸ்தானிலுள்ள தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே, பாகிஸ்தானிலுள்ள பிரெஞ்சு தூதரை வெளியேற்ற வேண்டும் என்று தெஹ்ரீக் - இல - லாபாய்க் அமைப்பின் தலைவர் கைதாகி நேற்று முன்தினம் விடுதலையானார். அவரின் அழைப்பின்பேரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் ஏற்பட்ட மோதல்களில் இரு பொலிஸார் உயிரிழந்தனர். வன்முறையை கட்டுப்படுத்த நீர் தாரை பிரயோகம், கண்ணீர் புகைக் குண்டுகள், இறப்பர் தோட்டாக்களை பொலிஸார் பயன்படுத்தி தாக்கினர். (ஐ)

## பிரேஸிலில் 1,300 சிறுவர்கள் கொரோனா தொற்றுக்கு பலி!

பிரேசிலியா, ஏப். 17

பிரேசில் நாட்டில் கொரோனா தொற்றால் 1,300 குழந்தைகள், சிறுவர்கள் உயிரிழந்தனர் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. ஆனால், உண்மையான உயிரிழப்பு 3 ஆயிரத்தை கடக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா தொற்றால் சிறுவர்கள் மரணிப்பது மிக அரிதாகவே உள்ளது. இந்நிலையில் ஆயிரக்கணக்கில் சிறுவர்கள் பிரேசிலில் இறந்தமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

9 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், குழந்தைகள் 500 மரணமாகினர். இதேபோல், 9 வயதுக்கு மேற்பட்ட 800 சிறுவர்கள் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், கொரோனாவால் உயிரிழந்த சிறுவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். ஏனெனில் பிரேசிலில் கொரோனா தொற்று பரிசோதனை குறைவாக நடப்பதே இதற்குக் காரணம் என்று கூறினர்.

அத்துடன், 9 வயதுக்கு உட்பட்ட 1,300 குழந்தைகள் - சிறுவர்களும், 9 வயதுக்கு மேற்பட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களும் உயிரிழந்திருக்கலாம் என்றும் சாவோ பாலோ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பேராசிரியர் பாததிமா மரின்ஹோ தெரிவித்துள்ளார். (ஐ)

### கொரோனாவை வென்றது இஸ்ரேல்:

## பொது இடங்களில் இனிமேல் முகக்கவசம் தேவையில்லை!

ஜெருசலேம், ஏப். 17

இஸ்ரேலில் கொரோனா தொற்று எண்ணிக்கை குறைந்தமையால் வரும் ஞாயிறு முதல் பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இஸ்ரேல் அரசு கொரோனா தடுப்பூசியை மக்களிடையே கொண்டு செல்வதில் வெற்றி அடைந்துள்ளது. அந்த நாட்டில் இதுவரை 70% க்கும் மேற்பட்ட மக்களுக்கு கொரோனா தடுப்பூசியின் முதல் டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பூசியை தீவிரப்படுத்தியமையால் இஸ்ரேலில் பெப்ரவரி மாதம் தொடக்கம் தொற்று குறைந்துள்ளது. கடந்த சில வாரங்களாக இஸ்ரேலில் 300க்கும் குறைவானவர்களே கொரோனாவால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனாவுக்கு எதிரான போரில் இஸ்ரேல் வெற்றி பெற்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த நிலையில் இஸ்ரேல் சுகாதாரத் துறை அமைச்சர் யுலி எடெல்ஸ்டீன் வெளியிட்ட அறிக்கையில், " கொரோனா வைரஸிலிருந்து நம்மை பாதுகாக்க முகக்கவசங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்த நிலையில் நாட்டில் கொரோனா தொற்று குறைந்துள்ளதால் பொது இடங்களில் இனி முகக்கவசம் தேவையில்லை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.



எனினும் மூடிய அரங்கில் நடைபெறும் நிகழ்வுகளில் மக்கள் முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும். வரும் ஞாயிறு முதல் இஸ்ரேலில் பொது இடங்களில் மக்கள் முகக்கவசங்கள் அணிந்து கொள்ளத் தேவையில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒட்டுமொத்த மக்களுக்கும் கொரோனா தடுப்பூசிகளை செலுத்துவதை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. (ஐ)



### இந்தியாவில் கொரோனா மரணம் உச்சம்:

## சடலங்களை எரிக்க மணிக்கணக்கில் நீள் வரிசையில் காத்திருக்கும் அவலம்!

புனே, ஏப். 17

இந்தியாவின் மஹாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் கொரோனா மரணங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் உடல்களை தகனம் செய்யும் மின் மயானங்களில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பிணங்களை ஏரியூட்டுவதற்காக உறவினர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்கும் அவல நிலை அங்கு ஏற்பட்டுள்ளது.

இந்தியாவில் நாளாந்த தொற்று 2 இலட்சத்தை கடந்துள்ளதுடன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரணங்களும் பதிவாகி வருகின்றன.

புனே நகரிலேயே இந்த மரணங்கள் அதிகம் பதிவாகின்றன. இதேபோன்று குஜராத்திலும் இவ்வாறான நெருக்கடியே நீடிக்கிறது. இதனால், இறந்தோரின் உடல்களை எரிப்பதற்காக உறவினர்கள்6 தொடக்கம் 10 மணி நேரம் வரை காத்திருக்கின்றனர். இந்த நகரில் நாளாந்தம் 50 முதல் 60 வரையான உடல்கள் எரியூட்டப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. அத்துடன், தினமும் 24 மணி நேரமும் மின் மயானங்களை திறந்திருக்க வேண்டிய சூழல் நிலவுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

## ஹொங்கொங் ஜனநாயக சார்பு ஊடக அதிபருக்கு ஒரு வருட சிறை!

ஹொங்கொங், ஏப். 17

ஹொங்கொங்கின் ஊடக அதிபரும் கோடீஸ்வரருமான ஜிம்மி லாய்க்கு 12 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஹொங்கொங்கில் 2019 ஆம் ஆண்டு ஜனநாயக சார்பு போராட்டங்களை நடத்த அழைப்பு விடுத்தமை, அதில் பங்கேற்றமை போன்றவற்றில் அவர் குற்றவாளியாக இனங்காணப்பட்டு நேற்று வெள்ளிக்கிழமை நீதிமன்றில் தண்டனைக்காக நிறுத்தப்பட்டார்.

இதன்போது, அவருடன் சேர்த்து 9 ஜனநாயக ஆர்வலர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

73 வயதான ஜிம்மி லாய், அப்பிள் டெய்லி நாளிதழ் மற்றும் ஊடகக் குழுமத்தின் தலைவராவார். இவர் சீனாவை கடுமையாக விமர்சித்து வருகிறார். இந்த வாரத்தின் ஆரம்பத்தில் அப்பிள் நாளிதழ் சிறையில் இருந்து அனுப்பப்பட்ட கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை வெளியிட்டது. அதில், "நீதியை நாடுவது பத்திரிகையாளர்களாகிய நமது பொறுப்பு. அநியாய சோதனையால் நாம் கண்மூடித்தனமாக இல்லாத வரை தீமை நம்மிடையே செல்ல அனுமதிக்க மாட்டோம். நாங்கள் என்றும் எமது பொறுப்பை நிறைவேற்றுவோம்", என்று அவர் எழுதியுள்ளார்.

கடந்த ஆண்டு சீனா ஹொங்கொங்கில் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதன்படி பிரிவினை, மற்றும் கீழ்படியாமையை அது குற்றமாக அறிவித்துள்ளது. இந்த மாதத்தின் ஆரம்பத்தில் பீஜிங் ஹொங்கொங்கின் தேர்தல் விதிகளையும் மாற்றியமைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)





## அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: எண்மர் பலி; 60 பேர் படுகாயம்!

நியூயோர்க், ஏப். 17

அமெரிக்காவில் வியாழன் இரவு இடம்பெற்ற துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 60 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

இண்டியானாபொலிஸ் மாகாணத்தின் விமான நிலையம் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உள்ளூர் நேரப்படி இரவு 11 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலை நடத்திய துப்பாக்கிதாரி தனது உயிரை மாய்த்துக் கொண்டார் என்று இண்டியானாபொலிஸ் நகரின் பொலிஸ் அதிகாரி ஜெனிகுக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அண்மை நாட்களாக துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் உச்சளவில் அதிகரித்துள்ளது. இதைத் தடுக்க கடுமையான சட்டவிதிகளை ஏற்படுத்த ஜனாதிபதி பைடன் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். வலய பாடசாலைகள் திங்கள் முதல் மீள ஆரம்பம்!

## ஒன்றுகூடலுக்கான தடை ஒரு வாரம் நீடிக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 17

கொரோனா பரவல் அச்சத்தால் மூடப்பட்ட யாழ்ப்பாண கல்வி வலயத்தின் நடவடிக்கைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார்.

இதற்கான அனுமதியை சுகாதாரப் பிரிவினர் வழங்கியுள்ளனர் என்று நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

யாழ். மாநகரம், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் கொரோனா தொற்றுப் பரவல் அதிகரித்தமையால் யாழ். கல்வி வலயப் பாடசாலைகள் மூடப்பட்டன. இந்நிலையில், நாடு முழுவதும் எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டின் அனைத்துப் பாடசாலைகளும் ஆரம்பமாகும் நிலையில், அன்றைய தினம் யாழ். வலயப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

பாடசாலைகள் தவிர, திருமண மண்டபங்கள், மக்கள்



ஒன்றுகூடுவதற்கான தடைகள் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-3)

# சுகாதார விதிகளை மீறுவோரை கைது செய்ய விசேட நடவடிக்கை

கொழும்பு, ஏப்.17

சுகாதார வழிகாட்டல்களை மீறுகின்றவர்களை கண்டு பிடிக்க விஷேட நடமாடும் சேவையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த சோதனை நடவடிக்கை நேற்று முதல் எதிர்வரும் வார இறுதி நாள்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், புத்தாண்டு நிகழ்வுகள் உட்பட ஏனைய சந்தர்ப்பங்களிலும் சுகாதார பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்கள் கூடிய கரிசனை செலுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# மடு பிரதேச செயலர் பிரிவில்: நேற்று விசேட மருத்துவ முகாம்

மன்னார், ஏப். 17

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வரும், மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவில் தட்சிணாமருத மடு கிராம மக்களின் சுகாதார நிலையை கருத்தில் கொண்டு நேற்று விசேட மருத்துவ முகாம் இடம் பெற்றது.




மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரனையுடன் தட்சிணாமருத மடு பொது நோக்கு மண்டபத்தில் நேற்று இந்த மருத்துவ முகாம் இடம்பெற்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் குழுத்தலைவர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் இடம் பெற்ற குறித்த மருத்துவ முகாமில் பாலம்பிட்டி, கீரிசுட்டன் தட்சிணாமருதமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக வைத்தியசாலைக்கு செல்ல முடியாத நிலையிலும், உரிய போக்கு வரத்து வசதிகள் இல்லாத நிலையிலும் குறித்த கிராமங்களை சேர்ந்த மக்கள் மருத்துவ தேவைக்காக வைத்தியசாலைகளுக்கு சென்று வர முடியாத நிலை காணப்பட்டது.

இந்த நிலையில் மக்களின் கோரிக்கையின் அடிப்படையில் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்.ரி வினோதன் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக மேற்படி மருத்துவ முகாம் ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

இந்த முகாமில் பிராந்திய சுகாதார பணிமனையின் திட்டமிடல் மருத்துவ அதிகாரி ஒஸ்மன் டெனி மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார பணி உதவியாளர்கள் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகள் மற்றும் மருத்துவ உதவிகளை வழங்கினர்.

இத்தகைய மருத்துவ முகாம்களை மடு பிரதேசத்தின் பல்வேறு கிராமங்களில் தொடர்சியாக நடத்துவதற்கு மெசிடோ நிறுவனம் ஏற்பாடுகளை செய்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மாமியார், மைத்துனரை கத்தியால் குத்திய நபர்!

வவுனியா, ஏப். 17

குடும்ப முரண்பாடு காரணமாக மருமகனின் கத்திக் குத்துக்கு இலக்காகி மாமியாரும் அவரின் மகனும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வவுனியா ஏ-9 வீதி வலயக் கல்வி அலுவலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது. இதில், அ. திரேஸ் (வயது - 35), அசோகன் வசந்தி (வயது - 52) ஆகியோரே காயமடைந்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு:

இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர், குடும்ப தகராறு தொடர்பில் மனைவியின் சகோதரனான மைத்துனருடன் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார். தர்க்கம் முற்றிய நிலையில், மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து மைத்துனரை குத்தியுள்ளார்.

இதைக் கண்ட அவரின் மாமியார் தனது மகனைப் பாதுகாக்கும் நோக்கில் அவரைத் தடுக்க முனைந்துள்ளார். ஆனால், அந்த நபர் அவரையும் கத்தியால் குத்தி விட்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

ஆனால், அவரை மடக்கிப் பிடித்த அப்பகுதியினர் பொலிஸில் ஒப்படைத்தனர்.

குறித்த நபர் கிளிநொச்சி திருநகரை சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. அவரைக் கைது செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# இலங்கையில் மேலும் 129 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப்.17

இலங்கையில் மேலும் 129 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ)

# யாழ்ப்பாண வணிகர்களுக்கு சுகாதார பிரிவின் அறிவித்தல்!

யாழ்ப்பாணம், ஏப். 17

கொரோனா பரவலால் முடக்கப்பட்ட யாழ். நகரின் வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்களுக்கு விசேட பி.சி.ஆர். பரிசோதனை இன்று நடத்தப்படவுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த பி.சி.ஆர். பரிசோதனையில் இதுவரை பரிசோதனைக்கு உட்படாத வணிகர்கள், ஊழியர்களை தவறாமல் பங்கேற்குமாறு யாழ். வணிகர் கழகம் கேட்டுள்ளது.

மேலும், முடக்கப்பட்ட பகுதியை சேர்ந்தவர்களுக்காக நடத்தப்படும் இறுதிப் பரிசோதனை முகாம் இதுவே என்றும், இதிலும் பங்கேற்க தவறும் வர்த்தகர்கள் நடவடிக்கையில் ஈடுபட முடியாது எனவும் சுகாதாரப் பகுதியினர் எச்சரித்துள்ளனர் என்றும் யாழ். வணிகர் கழகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ-3)

# நாட்டின் அனைத்து அடிப்படைவாத அமைப்புகளுக்கும் தடை விதியுங்கள்!

## ரெலோவின் இளைஞரணி செயலர்

யாழ்ப்பாணம், ஏப். 17

“இலங்கைத் தீவில் நிலையான அமைதியும் இனங்களிடையே நல்லிணக்கமும் சமாதானமும் ஏற்பட பாரபட்சமின்றி நாட்டில் உள்ள அனைத்து இன, மத அடிப்படைவாத அமைப்புக்களை தடை செய்வதே உண்மையான ஜனநாயகம் ஆகும்.”

இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ கட்சியின் இளைஞரணி செயலரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சபா. குகதாசன்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில்,

ஆட்சியாளர்கள் ஒரு தலைப்பட்சமாக சில இனங்களை குறிவைத்து தடை செய்தல் மற்றும் அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகளை ஏற்படுத்தல் என்பது ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சி அமைத்தார்கள். அத்துடன் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு அரசமைப்பின் கீழ் ஆட்சி புரிந்து கொண்டு பல இனமக்கள் வாழும் இந்த நாட்டில் சிறுபான்மை சமூகங்களை குறிவைத்து அடக்குமுறை சட்டங்களை நடைமுறைப் படுத்தல் நிலையான ஜனநாயகத்திற்கு ஆரோக்கியமாக அமைய சாத்தியமில்லை.

இலங்கைத் தீவில் வாழும் ஈழத் தமிழர்கள் வடக்கு - கிழக்கை பூர்வீக தாயகமாகக் கொண்டு அதி உச்ச அதிகாரப் பகிர்வை வேண்டி போராடும் மக்கள் மிக அவதானம். தற்போது சில சக்திகள் அடிப்படைவாத அமைப்புக்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். ஆனால், தொடர்ந்து தமிழர்கள் தமிழ் மொழியை அடிப்படையாக கொண்டு தமிழர் தேசமாக ஓரணியில் ஒற்றுமையாக பிரதேச வேறுபாடுகளை களைந்து வலுப் பெறுவதே எதிர்காலத்திற்கு ஆரோக்கியமாக அமையும் - என்றுள்ளது. (ஐ)

# ஆயகலை சஞ்சிகை வெளியானது

யாழ்ப்பாணம், ஏப். 17

ஆயகலை சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழ் தவத்திரு யோகர் சுவாமிகள் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

குரலோசை - நுண்கலைகளின் தயாக வெளியீடாக வந்துள்ள இந்த சஞ்சிகையில், இசை, நடன, நாடகத்துறை சார் எழுத்தாளர்களின் கட்டுரைகள், சம கால கலைத்துறை சார் செய்திகள் வெளியாகியுள்ளன.

# மின்னல் தாக்கி இளைஞர் காயம்!

முல்லைத்தீவு, ஏப். 17

மின்னல் தாக்கியதில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில், வேப்பமரத்தின் கீழிருந்த கோடரியை எடுக்கச் சென்றபோது மரத்தில் மின்னல் தாக்கியதாகவும் அதனால் அவருடைய உடலிலும் காயங்கள் ஏற்பட்டன என்றும் தெரிய வருகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் முல்லைத்தீவின் தண்ணிமுறிப்பில் மின்னல் தாக்கியதில் மூவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்கள் 1000 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசி வழங்கல்

## பக்க விளைவு ஏற்பட்டால் கொரோனா தடுப்பூசி ஆராய்ச்சி குழுவே பொறுப்பு

கொழும்பு,ஏப்.17

**சீனாவின் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசிகளின் வினைத்திறன் ஆய்வு மட்டத்திலேயே காணப்படுகின்றது. இந்நிலையில், இலங்கையர்கள் 1000 பேருக்கு இந்தத் தடுப்பூசி இதுவரை வழங்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படு கின்றது. எனவே, இதன் மூலம் நாட்டு மக்களுக்கு ஏதேனும் பக்க விளைவு கள் ஏற்படுமாயின் அதற்கு கொரோனா தடுப்பூசி தொடர்பில் ஆராயும் குழுவே பொறுப்பேற்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரி வித்துள்ளது.**

சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் இலங்கையிலுள்ள சீனப் பிர ஜைகளுக்கு மாத்திரமே வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனினும், தற்போது இலங் கைப் பிரஜைகளுக்கும் அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப் படுவதாகக் கூறப்படுகின்றமை தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிலைப் பாட்டை வினவிய போது, அதன் மத்திய குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரத்னசிங்கம் இதனைத் தெரிவித்தார்.

சீனாவின் சினோபார்ம் தடுப் பூசிகளை இலங்கை பெற்றுக் கொண்டுள்ள போதிலும் அதன் வினைத்திறன் எவ்வாறானதாக அமையும் என்பது இன்னும் ஆய்வு மட்டத்திலேயே காணப்படுகிறது.

ஆரம்பத்தில் இந்தத் தடுப் பூசிகள் இலங்கையிலுள்ள சீனப் பிரஜைகளுக்கு மாத்தி ரமே வழங்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால், தற் போது 1000 இலங்கைப் பிரஜை களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தடுப்பூசியின் வினைத்திறன் தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுத்து அதன் உண்மை தன்மை குறித்து நாட்டு மக்களுக்கு தெளிவு படுத்த உரிய தரப்பினர் நடவ டிக்கை எடுக்க வேண்டும் - என் றார். (எ)

# மின்னல் தாக்கத்தினால் பெண் உட்பட ஐவர் படுகாயம்

மட்டக்களப்பு,ஏப்.17

மட்டக்களப்பு மாவடி வேம்பு, கிருமிச்சை பிரதேசங் களில் மின்னல் தாக்குதலுக்கு இலக்காகி பெண் உட்பட ஐவர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த சில தினங்களாக கடும் வெயில் வாட்டிவந்த நிலையில் திடீர் காலநிலை மாற்றத்தால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடி மின்னலுடன் கடும் மழை பெய்தது.

இந்நிலையில், ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிவேம்பு பிரதேசத்தில்



வீதியால் சென்று கொண்டி ருந்த 4 ஆண்கள் மீது இடி மின்னல் தாக்கத்தால் படுகாய மடைந்தனர். அதேவேளை வாகரை பொலிஸ் பிரிவிலுள்ள கிருமிச்சை பிரதேசத்தில் வீட் டில் யன்னல் அருகே இருந்த பெண், இடி மின்னல் தாக்குத லுக்குள்ளாகிய நிலையில் இந்த ஐவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டனர். (எ)

# மேலும் 303 பேர் பூரண குணம்

கொழும்பு,ஏப்.17

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர் களுள் நேற்று மேலும் 303 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை கொரோனா தொற்றுக் குள்ளானவர்களில் 92 ஆயி ரத்து 611 பேர் பூரண குண மடைந்து வீடு திரும்பினர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந் தோர் எண்ணிக்கை 608 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# மூன்று தவணைகளின் போதும் பாடப்புத்தகம் வழங்க தீர்மானம்

கொழும்பு,ஏப்.17

அடுத்த ஆண்டு முதல் பாட சாலை மாணவர்களுக்கு மூன்று தவணைகளின் போதும் பாடப் புத்தகங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பு, தொலைதூரக் கல்வி, திறந்த பல்கலைக்கழகங்கள் மேம் பாட்டு இராஜாங்க அமைச்சால் இந்தத் தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது. (எ)

# அறநெறி பாடசாலை வவுனியாவில் திறப்பு





வவுனியா,ஏப்.17

சிவத்தொண்டர் நாகேந்தி ரம் சுபாதர்ஷன் ஞாபகார்த்த அறநெறிப் பாடசாலை வவு னியா ஆதி விநாயகர் ஆலயத் தில் நேற்றுத் திறந்துவைக்கப் பட்டது.

ஆலயத்தின் செயலாளர் தே.அமுதராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்துகொண்டு பாடசாலைக் கட்டடத்தை திறந்துவைத்தார்.

மேலும், சிறப்பு விருந்தி னர்களாக நகர சபை உறுப்பி னர் சந்திரகுலசிங்கம் மோகன், யாழ். ஸ்கந்தவரோதயாக் கல் லூரி அதிபர் மு.செல்வஸ்தான், திவாகரக் குருக்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த அறநெறிப் பாடசாலை யானது, ஆதி விநாயகர் ஆல யத்தின் நிர்வாகத்தினரால் வவு னியா நகரசபை உறுப்பினர் சுந் தரலிங்கம் காண்டீபனிடம் முன் வைக்கப்பட்ட கோரிக் கைக்கு அமைய, அவரது ஒழுங்கமைப் பில் அமைக்கப்பட்டுள்ளது.(எ)

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலம் ஊழல் மோசடிகளுக்கே வழிவகுக்கும்!

## ட்ரான்ஸ்பரன்ஸி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.17

அரசாங்கத்தால் பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட் டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்தின் விளைவாக ஊழல் மோசடிகள் இடம்பெறக்கூடிய வாய்ப்புக் கள் அதிகம் காணப்படுவதாகக் குறிப்பிட்டு, அதற்கு எதிராக ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷ னல் அமைப்பு உயர்நீதிமன்றத் தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

மேற்படி சட்டமூலத்தின் கூறுகள், அரசமைப்பின் முக் கிய சரத்துக்களை மீறும்வகை யில் அமைந்திருப்பதாகவும் அவை நிதிப்பாய்ச்சல்களை இலகுவாக்குவதன் விளைவாக நிதிமோசடிகள் இடம்பெறு வதற்கான வாய்ப்புக்களை ஏற் படுத்திக்கொடுப்பதாகவும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷ னல் அமைப்பு சுட்டிக்காட்டி யுள்ளது.

இதேவேளை, துறைமுக நகரத்தில் அமைக்கப்படவுள்ள வணிக, வர்த்தகக் கட்டமைப் புக்களின் உரிமையாளர்கள் யார்? என்பது தொடர்பில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை என்றும் அத்தகைய தகவல்களைப் பெறக்கூடியதாக இருப்பது ஊழல் மோசடிகள் நடைபெறா திருப்பதை உறுதிப்படுத்துவ தற்கு அவசியமாகும் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள் ளது.

மேலும், துறைமுக நகரத் தில் அமைக்கப்பட்டுள்ள வங்கி களின் நடவடிக்கைகளில் போதிய வெளிப்படைத்தன்மை பேணப்படாமையானது, நாட் டின் ஏனைய வங்கிகள் மீது பிரயோகிக்கப்படும் சட் டங்களிலிருந்து விலகிச்செயல் படுவதற்கு அவற்றுக்கு இட மளிக்கும் என்றும் அது நாட் டில் இரகசிய அதிகார வரம்பு ஒன்றை உருவாக்கும் என்றும் ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெஷ னல் அமைப்பு தெரிவித்துள் ளது. (எ)

# நீதிமன்றத்தை நாடியுள்ள 6 கட்சிகளின் நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.17

கட்சிகளுக்குள் காணப்படும் கொள்கை முரண்பாடு காரண மாக நீதிமன்றத்தை நாடியுள்ள கட்சிகளின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இதன் பிர காரம் நீதிமன்றங்களை நாடி யுள்ள 6 கட்சிகள் இனம்காணப் பட்டுள்ளன என அந்த ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளுக்குள் இருந்துவரும் கொள்கை முரண் பாடுகளைத் தீர்த்துக்கொள்ள நீதிமன்றம் சென்றுள்ள கட்சி



களின் நடவடிக்கைகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர் மானித்திருக்கின்றது. இவ்வாறு 6 கட்சிகள் நீதிமன்றம் சென்றி ருப்பதை அறிந்திருக்கின்றோம்.

குறித்த கட்சிகளின் செய லாளர், தலைவர் பதவி உட்பட பல பதவிகளுக்கு பல நபர்கள் முன்வருவதால் சட்டப்பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. இதனால் அந்த கட்சிகளின் பிரச்னை யைத் தீர்த்துக்கொள்ள நீதி மன்ற நடவடிக்கைக்கு சென்றிருக்கின்றன. அதனால் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறை வடையும் வரை அந்த கட்சி களின் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்திவைக்க தீர்மானித்திருக்கின்றோம்.

மேலும், குறித்த கட்சிகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் நிறை வடையும்வரை அந்த கட்சி களுக்கு எதிர்வரும் தேர்தல் களில் பங்கேற்கும் சந்தர்ப்பம் இல்லாமல்போகும்.

குறித்த கட்சிகளின் நன்மதிப் புக்கு பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் அவற்றின் பெயர் களை வெளிப்படுத்தவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பஞ்சாப்பை சுருட்டியது சென்னை சுப்பர் கிங்ஸ்!

மும்பை, ஏப். 17

தீபக் சாகரின் அபாரமான பந்து வீச்சால் 106 ஓட்டங்களுக்குள் பஞ்சாப் அணியை கட்டுப்படுத்தி, 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது சென்னை சுப்பர் கிங்ஸ். இதன் மூலம், சென்னை அணி இந்தத் தொடரில் முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

ஐ.பி.எல். போட்டியில் நேற்று நடந்த 8ஆவது போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.

மும்பையில் நடந்த இந்தப் போட்டியில் சென்னை அணியின் தலைவர் டோனி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

துடுப்பாட்டத்துக்கு சாதகமான வான்கடே மைதானத்தில், தனது முதல் போட்டியில் 221 ஓட்டங்களை குவித்திருந்தது பஞ்சாப் அணி. இதனால், நேற்றைய போட்டியிலும் அதிக ஓட்டங்களை குவிக்கும் நோக்கில் களமிறங்கியது அந்த அணி.

ஆனால், அவர்களின் இலக்கை அடைய விடவில்லை சாகர். சாகரின் பந்தில் ஓட்டம் எதனையும் எடுக்காமலே மயங்க் அகர்வால் 'போல்ட்' ஆனார்.



அடுத்து, அணித் தலைவர் கே.எல். ராகுல் 5 ஓட்டங்களுடன் வெளியேறினார். கெய்ல் 10, தீபக் ஹூடோ 10, நிக்கோல்ஸ் பூரன் 0 என்று சாகரின் பந்துவீச்சில் வீழந்தனர். இதனால், 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

ஆனால், ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த சாருக் கான் நிதானமாக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருடன் றிச்சர்ட்சன் துணையாக நின்று ஆடினார். இந்த இணை 27 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று ஆறுதல் கொடுத்தது. ஆனால், றிச்சர்ட்சன் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மீண்டும் பஞ்சாப் அணி தடுமாறியது.

ஆனாலும், சாருக் கான் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 47 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் அணி.

சென்னையின் பந்துவீச்சில், தீபக் சாகர் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

இலகுவான இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி, ராஜ்புத் கெய்க்வாட், டு பிளசிஸ் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். கெய்க் வாட் 5 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

டு பிளசிஸ் பொறுமையாக ஆடினார். ஆனால், அவருடன் அடுத்து இணைந்த மொயின் அலி அதிரடி காட்டினார். அவர் 7 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 46 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா 8, அம்பதி ராயுடு 0 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும், 15.4 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 107 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது சென்னை.

டு பிளசிஸ் 36 ஓட்டங்களையும், சாம் கரன் 5 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர் பஞ்சாப்பின் பந்துவீச்சில் முஹமட் சமி 2 விக்கெட்களை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக தீபக் சாகர் தெரிவானார். (ஐ)



# நடராஜனுக்கு இடமில்லை!

புதுடில்லி, ஏப். 17

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பி.சி.சி.ஐ.) வீரர்கள் ஒப்பந்தப் பட்டியலில் தமிழரான நடராஜனின் பெயர் இடம்பெறவில்லை.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் வீரர்கள் ஒப்பந்தப் பட்டியல் நேற்று வெளியானது. இதில், நடராஜனின் பெயர் இடம்பெறவில்லை.

நடராஜன் இந்திய அணிக்காக ஒரு டெஸ்ட், 2 ஒரு நாள், 4 இருபது - 20 போட்டிகளிலேயே விளையாடியுள்ளார். எனினும், குறிப்பிட்டளவு போட்டிகளில் விளையாடினால் மட்டுமே இந்தப் பட்டியலில் இடம் பெறலாம் என்று பி.சி.சி.ஐ. விதியில் கூறப்பட்டுள்ளது.

எனினும், அடுத்த வருடம் நடராஜனுக்கு ஒப்பந்தத்தில் இடம் வழங்கப்படும் என்று கூறப்பட்டது. (ஐ)

# தென்னாபிரிக்காவுடனான ரி - 20: தொடரை வென்றது பாகிஸ்தான்!

செஞ்சூரியன், ஏப். 17

தென்னாபிரிக்க அணியை 3 விக்கெட்களால் வெற்றி கொண்டு அந்த அணிக்கு எதிரான இருபது - 20 தொடரையும் வெற்றி கொண்டது பாகிஸ்தான் அணி.

தென்னாபிரிக்கா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 3 ஒருநாள் போட்டிகள், 4 இருபது- 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. ஒருநாள் தொடரை 2-1 கணக்கில் வென்ற பாகிஸ்தான், 2-1 என்ற கணக்கில் இருபது-20 தொடரில் முன்னிலை வகித்தது. இந்தப் போட்டியை வென்று தொடரை சமப்படுத்தி விட வேண்டும் என்று தென்னாபிரிக்காவும், தொடரை வென்று விட வேண்டும் என்ற துடிப்புடன் பாகிஸ்தானும் நேற்றைய போட்டியில் களமிறங்கின.

செஞ்சூரியனில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான், முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

தென்னாபிரிக்க அணிக்கு தொடக்கம் கொடுத்தது மலன், மார்க்ரம் இணை. நவாஸ் இந்த இணையை பிரித்து அனுப்பினார். மார்க்ரம் 11 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து வந்த வான் டெர் டுசென் மலனுடன் சேர்ந்து ஆடினார். 3 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 33 ஓட்டங்களை சேர்த்த மலன் அஷ்ரப்பின் பந்தில் விழுந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் ஹென்றிக்ஸன் 9 ஓட்டங்களுடன் விடைபெற்றார்.

5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 36 பந்துகளில் 52 ஓட்டங்களை சேர்த்த டுசென் ஹரிஸ் ரவூப்பின் பந்தில் ஆட்டமிழந்தார். இதைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் விக்கெட்கள் மளமளவென்று விழுந்தன.

19.3 ஓவர்களில் தென்னாபிரிக்கா அணி சகல விக்கெட்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் சார்பில் பந்துவீசிய, பஹீம் அஷ்ரப், ஹசன் அலி ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் ஹரிஷ் ரவூப் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு தொடக்கம் கொடுத்த றிஸ்வான் ஓட்டம் எதனையும் பெறாமலே ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். பாபர் அஸாமுடன் இணைந்த பஹார் ஷாமன் அதிரடி காட்டினார்.

அஸாம் பொறுமை காத்து ஆட, 5 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களை விளாசிய ஷாமன் 60 ஓட்டங்களைக் குவித்து வில்லியமஸின் பந்தில் ஆட்டமிழந்தார். அதே ஓவரிலேயே அஸாமும் 23 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

அப்போது, பாகிஸ்தான் அணி 104 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்ததிருந்தது. ஆனால், தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களின் ஆதிக்கம் அதிகரிக்க, முஹமட் ஹபீஸ் 10, ஹைதர் அலி 3, ஆசிப் அலி 5, பஹீம் அஷ்ரப் 7 என வேகமாக விக்கெட்களை இழக்க பாகிஸ்தான் அணி தடுமாற ஆரம்பித்தது.

எனினும், 8ஆவது விக்கெட்டுக்காக ஆடிய முஹமட் நவாஸ் பொறுமையாக ஆடி அணியை வெற்றியை நோக்கி நகர்த்திச் சென்றார்.

19.5ஆவது ஓவரில் 7 விக்கெட்களை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது பாகிஸ்தான். இந்த வெற்றி யின் மூலம் தொடரையும் தனதாக்கியது.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில், வில்லியம்ஸ், மகலா ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பஹீம் அஸ்ரப், தொடர் நாயகனாக பாபர் அஸாம் தெரிவாகினர். (ஐ)



# இந்திய வீரர்களின் சம்பள ஒப்பந்தம் வெளியானது!

புதுடில்லி, ஏப். 17

இந்திய அணி வீரர்களின் சம்பள ஒப்பந்தப் பட்டியலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) நேற்று வெளியிட்டது.

சப்மன் கில், முஹமது சிராஜ் ஆகியோர் ஒரு கோடி ரூபா ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளனர். நீண்டகாலம் ஓய்வில் இருந்த புவனேஷ்வர் குமாரின் தரம் குறைக்கப்பட்டுள்ளது கேதார் ஜாதவ் ஒப்பந்த பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, 7 கோடி இந்திய ரூபாவை ஊதியமாகப் பெறும் ஏ பிளஸ் பிரிவில், விராட் கோலி, ரோஹித் சர்மா, ஜஸ்பிரித் பும்ரா இடம்பெற்றுள்ளனர்.

5 கோடி இந்திய ரூபா சம்பளம் பெறும் ஏ பிரிவில், ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, புஜரா, ரஹானே, தவான், கே.எல். ராகுல், முஹமது ஷமி, இசாந்த் சர்மா, ரிஷப் பந்த், ஹார்திக் பாண்ட்யா ஆகியோர் உள்ளனர்.

3 கோடி ரூபா ஊதியம் பெறும் பி பிரிவு பட்டியலில், விரித்திமன் சகா, உமேஷ் யாதவ், புவனேஷ்வர் குமார், தாகூர், மயங்க் அகர்வால் இடம்பிடித்துள்ளனர்.

ஒரு கோடி இந்திய ரூபாவை சம்பளமாக பெறுவோரின் சி பிரிவில், குல்தீப் யாதவ், நவ்தீப் ஷைனி, தீபக் சஹர், சப்மன் கில், ஹனும விகாரி, அக்ஸர் பட்டேல், ஸ்ரேயாஷ் ஐயர், வாஷிங்டன் சுந்தர், சாசல், முஹமது சிராஜ் ஆகியோர் உள்ளனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் : திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு

**பகல்**
12.00 மணி : வீக் எண்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-மாகாண பாடசாலைகள் தேசிய பாடசாலையாக மாற்றம் பெறுவதில பகுதி-02



**இரவு**
7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org